உ
சிவமயம்





மூளாய், டச்சுவீதி

# அமரர் திருமதி சாரதா பரஞ்சோதி

(ஆசிரியை, யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்)

அவர்களின் நினைவாக வெளிவரும்

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மூளாய், டச்சுவீதி

# அமரர் திருமதி சாரதா பரஞ்சோதி

(ஆசிரியை, யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்)

அவர்களின் நினைவாக வெளிவரும்

# நினைவு மலர்

12.11.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமர்ப்பணம்

எமது குடும்ப ஒளிவிளக்காகத் திகழ்ந்து

எம்மையெல்லாம்

ஆற்றொணாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு

இன்றும் எமது நினைவில் நிறைந்திருக்கும்

எமது அன்பிற்கும், பாசத்திற்கும் உரிய

தலைவியின்ஆத்மா சாந்தியடைய

வதிரன்புலோ சித்திவிநாயக முத்துக்குமாரசுவாமியின்

பாதாரவிந்தங்களைப் பிரார்த்தித்து

இம்மலரினை சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மலர்வு
03. 11. 1965

அமரர்

உதிர்வு
25. 09. 2007

# திருமதி சாரதா பரஞ்சோதி

## திதி வெண்பா

ஆண்டு சர்வசித்து கன்னிமதி ஈர்நாலில்
பூண்ட பூர்வ சதுர்த்தசியில் - நீண்டபுகழ்
இசைமாணி சாரதா இசைக்கலா வித்தகர்
இறைவனடி இணைந்தாள் இனிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

பண்:- காந்தார பஞ்சமம் தாளம்:- ஆதி
இராகம்:- கேதார கௌளை அருளியவர்:- திருஞானசம்பந்தர்
திருமுறை:- 03 தலம்:- கோயில்

திருச்சிற்றம்பலம்

ஆடினாய் நறு நெய்யொடு பால்தயிர்
அந்தணர் பிரியாத சிற்றம்பலம்
நாடினாய் இடமாநறுங் கொன்றை நயந்தவனே
பாடினாய் மறையோடு பல் கீதமும்
பல் சடைப்பனி கால்கதிர் வெண்டிங்கள்
சூடினாய் அருளாய் சுருங்க எம தொல்வினையே

திருச்சிற்றம்பலம்

# திருத்தாண்டகம்

இராகம்:- ஹரிகாம்போதி அருளியவர்:- திருநாவுக்கரசு நாயனார்
திருமுறை:- 06 தலம்:- திருவையாறு
பண்:-

திருச்சிற்றம்பலம்

உற்றிருந்த உணர்வெலா மானாய் நீயே
உற்றவர்க்கோர் சுற்றமாய் நின்றாய் நீயே
கற்றிருந்த கலைஞான மானாய் நீயே
கற்றவர்க்கோர் கற்பகமாய் நின்றாய் நீயே
பெற்றிருந்த தாயவளின் நல்லாய் நீயே
பிரானா யடியென்மேல் வைத்தாய் நீயே
செற்றிருந்த திருநீல கண்டன் நீயே
திருவையாறகலாத செம்பொற் சோதீ

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரம்

பண்:- தக்கராகம்
இராகம்:- காம்போதி
திருமுறை:- 07

அருளியவர்:- சுந்தரமூர்த்தி நாயனார்
தலம்:- திருக்கலய நல்லூர்

திருச்சிற்றம்பலம்

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்ட தவங்கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவள் தம் குணத்தினை நன்கறிந்து
விரும்பும் வரம் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர் கோன் கண்ணுதலோன் மேவிய ஊர்வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில் சூழ் அயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கள் முகமலருங் கலய நல்லூர்காணே

திருச்சிற்றம்பலம்

# திருவாசகம்

பண்:- முல்லை
இராகம்:- மோகனம்
திருமுறை:- 8

அருளியவர்:- மாணிக்கவாசகர்
தலம்:- திருத்தில்லை

திருச்சிற்றம்பலம்

சிந்தனை நின் தனக்காக்கி நாயினேன் தன்
கண்ணிணை நின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணி வார்த்தைக் காக்கி ஐம்புலன்களார
வந்தனை ஆட்கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடனைய மேனித்
தனிச் சுடரே யிரண்டு மிலித் தனியனேற்கே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

பண்:- பஞ்சமம் அருளியவர்:- திருமாளிகைத் தேவர்
திருமுறை:- 09 தலம்:- திருவீழிமிழலை

திருச்சிற்றம்பலம்

ஏகநாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகுதிரு வீழி
மிழலை விண்ணிழி செழுங் கோயில்
யோக நாயகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே

திருச்சிற்றம்பலம்

# திருப்பல்லாண்டு

பண்:- பஞ்சமம் அருளியவர்:- சேந்தனார்
திருமுறை:- 09 தலம்:- கோயில்

திருச்சிற்றம்பலம்

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ் வண்டத் தொடுமுடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயிலும் போனகமு மருளிச்
சோதிமணி முடித்தாமமும் நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

பண்:- செந்திருத்தி　　　　அருளியவர்:- சேக்கிழார்
இராகம்:- மத்தியமாவதி　　　திருமுறை:- 12

திருச்சிற்றம்பலம்

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான் புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலககெலாம்.

திருச்சிற்றம்பலம்

## திருப்புகழ்

இராகம்:- சுபபந்து வராளி　தாளம்:- மிஸ்ரசாபு

திருச்சிற்றம்பலம்

காதி மோதி வாதாட நூல் கற்றிடுவோரும்
காசு தேடி ஈயாமல் வாழப் பெறுவோரும்
மாது தேடி வாழ்வே என நெக்குருகாரும்
மாறிலாத மாகாலன் ஊர்புக்கலைவாரே
தாத ரூபமானாதராகத் துணை வோனே
நாகலோகம் ஈரேழு பாருக் குரியோனே
தீதிலாத வேல் வீர சேவற் கொடியோனே
தேவ தேவ தேவாதி தேவ பெருமானே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கானக் குயிலின் கதை

## அமரர் திருமதி சாரதா பரஞ்சோதி

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

ஈழத் திருநாட்டின் இசை வளர்ச்சியில் மூளாயூரின் பங்களிப்பு மிக மிகக் காத்திரமானது. வேழ முகனும் முத்துக்குமரனும் வீற்றிருக்கும் இத்திருவூர், ஆழமான இசைப் புலமையாளர் பலரைத் தந்த பெருமையுடையது. இணுவில், அளவெட்டி வரிசையில் இக்கிராமத்துக்கும் தனித்துவமானதொரு வரலாறு உண்டு. தொடரும் இந்த இசை வரலாற்றினை முன்னோக்கி நகர்த்தியவர்களில் திருமதி சாரதா பரஞ்சோதி அவர்களும் ஒருவர்.

அமரர் சாரதா அவர்கள் தளையரத்தின முதலியார் மரபிலே, இசைப்பராம்பரியம்மிக்க குடும்பத்திலே, சச்சிதானந்தன் அருந்ததிதேவி தம்பதிகளின் புதல்வியாக 03-11-1965இல் பிறந்தார். தந்தையார் சச்சிதானந்தன் அவர்கள் ஆசிரியப் பணியோடு யாழ். மாவட்ட சாரண ஆணையாளராகவும் பதவி வகித்தவர். ஆங்கிலப் புலமை வாய்ந்தவர். தனது தகப்பனார் கனகசபை போன்றே இசைஞானம் மிக்கவர். தாயார் அருந்ததிதேவி அவர்கள் இனிய பண்புகள் கொண்ட இல்லத்தரசி. சாரதாவின் சகோதரர்கள் மூவர். மூத்தவர் திரு. கோவிந்தராஜன் (முகாமையாளர், தேசிய வீடமைப்பு அதிகாரசபை, முல்லைத்தீவு) அடுத்தவர் அமரத்துவம் எய்திய செல்வி. யசோதா (ஆசிரியை, புனித திரேசா மகாவித்தியாலயம், கிளிநொச்சி) இளையவர் திருமதி கோமளா தெய்வேந்திரன் (ஆசிரியை, யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை) இவர்கள் எல்லோரும் இசையின்பால் நாட்டமுள்ளவர்களே.

சிறுமியாக இருக்கும்போதே சாரதா, இறையுணர்வும் சீரிய பண்பும் கொண்டவராக விளங்கினார். தமது குடும்பத்தினருடன் வதிரன்புலோ சென்று வழிபடுவதும் அங்கே நடைபெறும் பஜனைகளில் தன் பிஞ்சுக் குரலால் கேட்போரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சையள்ளும் வகையில் பாடுவதும் அவர் வழக்கம். இந்த இறையனுபவமே பின்னாளில் அவரை,

"முத்தழகன் முருகனுடன் கணபதியும் - வந்து
சித்திமுற அருள்சுரக்கும் மூளாயூர்"
என "வதிரகானம்" பாட வகை செய்தது.

தனது ஆரம்பக் கல்வியை மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தொடங்கிய சாரதா, உயர்கல்வியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் தொடர்ந்தார். அடக்கமும், கீழ்ப்படிவுமுள்ள மாணவியாகத் திகழ்ந்த அவர் கல்வி, கலை, விளையாட்டு எனப்பல்துறைகளிலும் பிரகாசித்தார். உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் சித்தியெய்திய பின் தன் விருப்பத்தேர்வான இசையைக் கற்றிட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

பள்ளிப் பருவத்திலேயே சாரதாவின் இசைப் பயில்வும் ஆரம்பமாயிற்று. அவரின் இசைக்கல்விக்கு அடித்தளமிட்டவர்கள் மூவர். ஒருவர் அவரது ஆரம்ப குருவாகிய திருமதி. விஜயலட்சுமி இராஜநாயகம், மற்றவர் புகழ் பூத்த இசைமேதையும் முன்னாள் பிரதிக் கல்விப்பணிப்பாளருமாகிய எஸ். கணபதிப்பிள்ளை அவர்கள். மற்றவர் யாழ்ப்பாணக்கல்லூரி முன்னாள் இசையாசிரியர் ஜீவா இரத்தினசபாபதி.

இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் அன்றைய விரிவுரையாளர்களான திரு. எ. கே. கருணாகரன், திருமதி. ஜெகதாம்பிகை கிருஷ்ணானந்தசிவம், திரு. எஸ். பத்மலிங்கம், திரு. என். வி. எம். நவரத்தினம், திரு. கே. இராமநாதன் ஆகிய தலைசிறந்த இசைக்கலைஞர்களிடம் பாடம் கேட்கும் வாய்ப்பு சாரதாவுக்குக் கிட்டியது. நான்காண்டுக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்து "இசைக்கலைமாணி"(1991) பட்டம் பெற்ற அவர் அங்கேயே தற்காலிக விரிவுரையாளராக நியமனமும் பெற்றார். தன்னை முழுமையாக அர்ப்பணித்து அவர் ஆற்றிய விரிவுரைகள் மாணவர் மத்தியில் பெருமதிப்பைப் பெற்றன. விரிவுரையாளராகக் கடமையாற்றிக் கொண்டே மேலும் முயன்று படித்து "கலைமாணி" (1994) "நுண்கலைமாணி" (1998) ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டங்களையும் தனதாக்கிக் கொண்டார். வட இலங்கைச் சங்கீத சபையின் தேர்வுகளில் வாய்ப்பாட்டு, வயலின். பண்ணிசை ஆகிய பாடங்களில் தோற்றி "கலாவித்தகர்" (1991) பட்டத்தினையும் பெற்றிருந்தவர் சாரதா.

சாரதா அவர்களின திருமணம் 1997இல் நடந்தேறியது. மூளாய் ஊரைச் சேர்ந்தவரும் உறவினருமான டுபாய் நாட்டில் பணிபுரிபவருமாகிய சதாசிவம் பரஞ்சோதி அவர்ளைக் கைப்பிடித்து, இல்லறமாம் நல்லறத்தில் இணைந்ததன் பயனாகச் சாரங்கன், சங்கவி ஆகிய இரு பிள்ளைச் செல்வங்களுக்குத் தாயானார். தன் குடும்பத்தின் மீது மிகுந்த அன்பும் பாசமும் கொண்டவர் அவர். தன் பிள்ளைகளின் எதிர்காலத்தை மனதில் கொண்டு அவர்களுக்குக் கல்வியோடு வாய்ப்பாடு, நடனம், மிருதங்கம் ஆகிய கலைகளையும் பயிற்றுவித்தார். யாருக்கும் தீங்கு எண்ணாத குழந்தை உள்ளம் அவருடையது. தன் உறவு, சுற்றம் அயல் அனைத்தையும் அரவணைத்து எல்லோருக்கும் இனியவராக விளங்கினார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் 'ஏ' தரக் கலைஞராக விளங்கி இசை நிகழ்ச்சிகளை வழங்கி வந்ததோடு அந்த நிறுவனம் வழங்கிய 1997 – 1998 ஆண்டுக்கான "ஸவ சங்கீத" புலமைப் பரிசிலையும் பெற்றுக்கொண்டார். இளங் கலைஞர் மன்றம், தேசிய சேவைகள் இளைஞர் மன்றம் ஆகியவை நடத்திய இசைப்போட்டிகளிலும் பரிசில்களை வென்றெடுத்தவர் அவர்.

நுண்கலைமாணி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா (1999) பட்டங்களுக்காக இரண்டு ஆய்வுகளை மேற்கொண்டவர் சாரதா அவர்கள். ஒன்று இசை சார்ந்தது, மற்றையது கல்வியியல் பற்றியது. இரண்டு ஆய்வுகளுமே உள்ளடக்கத்தில் கனதியா னவை.

தூய கர்நாடக இசைமரபில் பாடும் ஒரு சிலரில் சாரதா அவர்களும் ஒருவர். சுருதி லய பாவம் நிறைந்த அவரது சுத்த சங்கீதம் எல்லோருக்கும் சுகம் தந்ததில் வியப்பொன்றுமில்லை. அவர் பாடாத இடமேயில்லை என்று சொல்லுமளவுக்கு அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல் எங்கும் ஒலித்தது. ஆண்டுதோறும் நல்லூர் மகோற்சவத்தின் போது அவர் வழங்கிய தெய்வீக இசையரங்குகள் எல்லோரையும் ஈர்த்தன. கொழும்புக் கம்பன் கழக இசைவிழாவில் இந்தியக் கலைஞர்கள் முன்னிலையில் பாடி இந்த நாட்டின் பெருமையை உயர்த்தியவர் அவர்.

தன் வழிபடு தெய்வங்களான சித்திவிநாயகப் பெருமான் முத்துக்குமாரப் பெருமான் புகழ்பாடும் "வதிரகானம்" என்னும் இசைப் பேழையை வெளியிட்டு மகிழ்ந்தார். அவ்வெளியீட்டு விழாவில் அவ்வூர் மக்கள் அவருக்கு "இசையாழி" என்னும் கௌரவப் பட்டம் தந்து பாராட்டி மகிழ்ந்தனர். தன் அயற்கிராமமான தொல்புரத்தில் உறையும் ஜெகஜோதி அம்பாள் மீதும் ஆழ்ந்த பக்தி கொண்டவர். அவ்வாலயத் திருவிழாக்களில் திருமுறைகளையும் ஊஞ்சற் பாடல்களையும் தொடர்ந்து பாடி வந்தார்.

சில காரணங்களுக்காகப் பல்கலைக்கழகச் சேவை யினின்றும் விடுபட்டு ஆசிரிய சேவைகளில் தன்னை இணைத்துக் கொண்டார். சங்கானை சிவப்பிரகாசாவின் இசைத் துறைப்பொறுப்பை ஏற்று இறுதிமூச்சு வரை பாடசாலை நலனிலும் மாணவர் நலனிலும் அதீத அக்கறை கொண்டவராக விளங்கினார். வவுனியாவில் நடைபெறவிருந்த மாகாணமட்ட நாட்டிய நாடகப் போட்டி ஒன்றுக்கு மாணவர்களை அழைத்துச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே இடை வழியில் இத்துன்பியல் நாடகம் அரங்கேறியிருக்கிறது. கிளைமோர் வடிவில் வந்த காலன் அவர் உயிரைக் காவு கொண்டு விட்டான்.

ஆற்றுகைத் திறன்மிக்க கலைஞராகவும் அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியையாகவும் திகழ்ந்த சாரதா பரஞ்சோதி அவர்களின் சேவையைத் தொடர்ந்தும் பெற நாம் கொடுத்து வைக்கவில்லை. பாடிக் களித்த குயில் கண்ணை மூடிக்கொண்டு விட்டது. ஆயினும் வதிரகானம் ஒலிக்கும் வரை அவர் எம்மோடு வாழ்ந்து கொண்டேயிருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை:- திரு . சச்சிதானந்தன்
தாய்:- திருமதி ச. அருந்ததிதேவி
பிறப்பு:- 03/ 11/ 1965 மூளாய்
ஆரம்பக்கல்வி:- 05/ 01/1971 மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்
உயர்கல்வி:- 28/01/1976 – 31/08/1984 வரை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி
1981 ஆவணி க. பொ. த. சாதாரணதரம் வட்டுக்கோட்டை
1984 ஆவணி க. பொ. த. உயர்தரம் விஞ்ஞானப்பிரிவு
பட்டப்படிப்பு (இசைக்கலைமாணி) 1986 – 1991 யாழ் இராமநாதன் நுண்கலைக்கல்லூரி
கலைப்பட்டதாரி:- 1990 – 1994 யாழ். பல்கலைக் கழகம்
நுண்கலைமானி:-1998 யாழ். பல்கலைக் கழகம்
பட்டப்பின் படிப்பு:- 1999 – 2001 டிப்புளோமா யாழ். பல்கலைக் கழகம்
கலாவித்தகர்:- 1992ம் ஆண்டு வட இலங்கைச் சங்கீத சபை நடாத்திய 6ம் தரப்பரீட்சை, ஆசிரிய தராதரம் 1ம் பிரிவில் சித்தியெய்தி அந்நிறுவனத்தின் வயிர விழாவின் போது 'கலாவித்தகர்' பட்டம் பெற்றார்.
1 – 6 தரம் வரை வட இலங்கை சங்கீத சபை வருடாந்தம் நடாத்திய பரீட்சைகளிற் தோற்றி தராதரப் பத்திரம் பெற்றார். 1973 – 1992 வரை வாய்ப்பாட்டு, பண்ணிசை, வயலின் போன்ற பாடங்களில் விஷேட சித்தி பெற்றார்.
இசைத் தேர்ச்சி:- 1990/05/17ம் திகதி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இசைத்தேர்வில் (A) "ஏ" பிரிவில் சித்தி பெற்றார்.
ஸவ சங்கீத பட்டம்:- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன "ஏ" பிரிவு சித்தியைத் தொடர்ந்து 1997 – 1998ம் ஆண்டிற்கான 'ஸவசங்கீத' புலமைப்பரிசில் பெற்றார்.
இசைப்போட்டிகள்:- இளங்கலைஞர் மன்றம், தேசிய இளங்கலைஞர் மன்றம், நடாத்தும் இசைப் போட்டிகளிற் பங்கு கொண்டு பரிசில்களும் பெற்றார்.
இசையாழி:- வதிரன்புலோ சித்தி விநாயகர் ஒலி நாடா "வதிரகானம்" வெளியிட்டமைக்கு அவ்வூர் மக்கள் இசையாழி பட்டம் வழங்கிக் கௌரவித்தனர். 30.06.2004
இசை ஆசிரியர்:- கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் வித்தியாசாலை 15/09/1989
இசைநுண்கலைக்கல்லூரி தற்காலிக விரிவுரையாளர் நியமனம் 1991 – 1997
திருமணம்:- சதாசிவம் பரஞ்சோதி மூளாயூரைச் சேர்ந்த டுபாயில் வேலை பார்ப்பவரை 1997ம் ஆண்டு கரம்பற்றினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள்:- சாரங்கன் 1998/ 08/ 07
சங்கவி 2000/ 09/ 01

சங்கீத ஆசிரியர் பதவி:- 1997ம் ஆண்டு இராமநாதன் இசை நுண்கலைக் கல்லூரியில் இருந்து விலகியபின் 1998/ 09/ 16ம் திகதி யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நிரந்தர இசையாசிரியராக சேர்ந்து கொண்டார். 2007/ 09/ 25 இறுதி மூச்சு வரை அப்பள்ளியின் உயர்வுக்காகத் தான் பெற்ற பட்டங்களின் பயனைச் சாதனையாக்கினார்.

## சாதனை மாணவர்கள்

- ♥ 2003ம் ஆண்டு குழு இசை தேசிய மட்டம் 2ம் இடம் (வெள்ளிப்பதக்கம்)
- ♥ 2004ம் ஆண்டு தனியிசை மாவட்ட மட்டம் 2ம் இடம்
- ♥ 2005ம் ஆண்டு குழு இசை மாவட்ட மட்டம் 1ம் இடம்
- ♥ 2006ம் ஆண்டு குழு இசை மாவட்ட மட்டம் 1ம் இடம்
- ♥ பாடசாலை, கோட்டமட்ட, வலயமட்ட, மாவட்டமட்ட, மாகாணமட்ட போட்டிகளில் மாணவர்களைப் பங்கு பெற வைத்து வெற்றி பெற வைத்தார்.
- ♥ சகலாகலா வல்லி மாலைப்போட்டி, திருமறையோதற் போட்டி, அழகெழல் போட்டிகளில் மாணவர் முதல் மூன்று இடங்களையும் பெற வைத்தார். பாடசாலையில் நடைபெறும் சகல நடன நிகழ்ச்சிகளிலும் போட்டிகளிலும் அணிசேர் இசையமைப்பாளராக, பாடகியாக இசையமைப்பினை வழங்கி ஒத்துளைத்தார்.
- ♥ கம்பன் கழகம் நடாத்தும் கம்பன் விழாக்களின் மேடைகளிலும் இந்திய அறிஞர்கள் முன்னிலையில் இசைபாடி நாட்டின் பெருமையை அயல் நாட்டிலும் நிலை நிறுத்தினார்.
- ♥ இளம் கலைஞர் மன்றம், தேசிய இளம் கலைஞர் மன்றம் நல்லூர்க் கந்தன் உற்சவ தினங்களில் எல்லாம் இசைக்கச்சேரி செய்து கேட்போர்களிடம்நல்ல மதிப்பும் புகழும் பெற்றார். சுருங்கச் சொன்னால் இவர் பாடாத மேடைகளே இல்லை எனலாம். கலந்து கொள்ளாத இசைப் போட்டிகளே இல்லை. சங்கீதத் துறையில் மட்டுமன்றி விளையாட்டு, நாடகம் போன்ற துறைகளிலும் படிக்கின்ற காலங்களில் சாதனை புரிந்துள்ளார்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

உ

குருபாதம்

**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்**

நல்லூர் யாழ்ப்பாணம் - இலங்கை

**Nallai Thirugnanasambantar Atheenam**

NALLUR, JAFFNA - SRI LANKA.

☎ ~~24018~~ 2222870

# அனுதாபச் செய்தி

*அன்பு நெஞ்சத்தீர்!*

திருமதி சாரதா பரஞ்சோதியின் தீடீர் மறைவு அனைவரது நெஞ்சத்தையும் வேதனையில் ஆழ்த்தியது. இசை உலகில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துக்கொண்ட சாரதாவினுடைய மறைவை எவ்வகையிலும் நிறைவு செய்ய முடியாது. எல்லோரோடும் இனிமையாகப் பழகும் சுபாவம், எடுத்த விடயத்தை செவ்வனே ஆற்றுகின்ற திறனும் நல்லாசிரியரும் நற்தாயுமாக இசையின் மூலமாக எல்லோருடைய உள்ளத்தையும் கவர்ந்த சாரதாவின் மறைவு குடும்பத்தினருக்கு மட்டுமன்றி சங்கீத உலகிற்கே பேரிழப்பாகும்.

மறைவு என்பது இறைவனால் வழங்கப்பட்ட நியதியே ஆகும். அணிந்திருந்த ஆடை கிழிந்துவிட்டால் வேறு உடை மாற்றுவது போன்று ஆன்மாவும் உடலை மாற்றிக்கொள்கின்றது. இதனை உணர்ந்து மனிதர்களாகிய நாம் வாழுகின்ற வாழ்க்கையே என்றும் நம்மை வாழவைக்கின்றன. குருபக்தி இறைபக்தி அனைத்தும் கொண்ட திருமதி சாரதா பரம்சோதியின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
ஸ்ரீல. ஸ்ரீ. ஸ்வாமிகள்

**அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்**

- குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சி. ஜெயானந்தசர்மா
பிள்ளையார் கோவில்
மூளாய்
சுழிபுரம்.

S. JEYANANTHASARMA
PILLAIAR KOVIL
MOOLAI
CHULIPURAM.

## சங்கீத ஞானசோதி மறைந்தது

மூளாயின் தவப்பயனாக சாரதா பரஞ்சோதி (கலைமாணி, இசைக்கலைமாணி, கல்வி டிப்ளோமா) அவர்கள் மூளாய், கனகசபை, சச்சிதானந்தன் (ஆங்கில ஆசிரியர், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி) அருந்ததி தம்பதியினருக்கு மூன்றாவது பிள்ளையாக, 03-11-1965ல் பிறந்தார்.

தந்தையார் கற்பித்த கல்லூரியிலே சகோதரர்களுடன் கற்றார். சாரதா அவர்கள் பாடசாலைப் படிப்பை நிறைவு செய்யும் பொழுதே, சங்கீத ஞானத்தில், தேர்ந்தவராக இருந்தார். அதனால் அவர் யாழ். நுண்கலைக் கல்லூரியில் பயிலும் நற்பேறு கிடைத்தது. அங்கு சிறந்த முறையில் பயின்று, சிறந்த பேறுபெற்றார். அதனால் நுண்கலைக் கல்லூரியில் 6 வருடங்கள் வரை சங்கீத விரிவுரையாளராகவும் பணிபுரிந்த பெருமைக்குரியவராவார். மிகவும் சாந்த குணமும் அன்பும், பண்பும், பணிவும், நிறைந்த பண்புள்ளவர். பின்பு யாழ். சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலத்தில் சங்கீத ஆசிரியையாகப் பணியாற்றும் பேறுபெற்றார். அவரின் அமைதியான பேச்சும், அன்பான அரவணைப்பும் இன்சொல்லும், தன்னிடம் பயிலும் மாணவர்களைக் கவர்ந்தன. மாணவர்களுக்குச் சங்கீதத்தில் ஆர்வமும் அன்பும் பெருக வாய்ப்பாக அமைந்தன. ஒருபோதும் கோபித்துப் பேச மாட்டார். இவரின் சங்கீத ஞானஜோதி விரிவடைய கடவுளின் கிருபையால் கிடைக்கப் பெற்ற டுபாயில் வேலை செய்கிற பரஞ்சோதி என்னும் செம்மலாவார் ஞானசோதியுடன், பரஞ்சோதியும் சேர இவரின் ஞானசோதி மேலும் பிரகாசிக்கலானது. இத்தம்பதியினருக்கு கடவுளின் அருளால் சாரங்கன் என்னும் ஆஸ்திக்கு ஒரு மகனும், சங்கவி என்னும் ஆசைக்கொரு மகளும் கிடைத்தனர். தம்பிள்ளைச் செல்வங்களை நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக அன்போடு போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்தனர். இவர்களையும் தான் கல்வி கற்ற யாழ்ப்பாணக் கல்லூரியிலே கல்வி பயில வைத்தார்.

ஆசிரியை சாரதா இசையின் நுட்பங்களை நன்கறிந்தவர். மூளாய் வதிரன்புலோ சித்திவிநாகர், முத்துக்குமார சுவாமி ஆலங்களின் பண்ணிசைகள், திருமுறைகள், முற்றோதல்கள் நடைபெறும் பொழுது கேட்போர் மெய்மறந்து இருப்பர்.

தான் கல்வி கற்பித்த யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் மாணவர்களை சங்கீதம் சம்பந்தமான போட்டிகளிலும் பங்குபெறச் செய்து வெற்றியும் பெற்று மாணவர்களை மகிழ்வடைய வைப்பார். கோட்டம், வலயம், மாவட்டம், தேசியமட்டம் ஆகிய போட்டிகளிலும் பங்குபெறச் செய்து வெற்றி காண்பார்.

அத்துடன் தனது இருபிள்ளைகளின் கல்வியிலும் மிகவும் கவனமாக இருந்தார். மின்னாமல், முழங்காமல் காலனும் தனது காரியத்தை கச்சிதமாய் பார்த்தபடியால் 25-09-2007 அன்று காலை சாரதா ஆசிரியை அவர்கள் தனது பிள்ளைகளைப் பாடசாலையில் விட்டு விட்டு தனது கடமைக்குச் செல்லும் வழியில் சித்தன்கேணியில் காலை 8.00 மணியளவில் கிளைமோர் குண்டில் அகப்பட்டு ஒரு நிமிடத்தில் உயிரிழந்தார். சங்கீத ஞானசோதி மறைந்தது எல்லோரும் துயரில் ஆழ்ந்தனர் அவ்வாறு துயருற்றிருக்கும் கணவர், பிள்ளைகள், குடும்பத்தாருக்கும், உற்றார், உறவினருக்கும், நண்பர்கள் எல்லோருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மூளாய் வதிரன்புலோ
முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானம்.
மூளாய், சுழிபுரம்.

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது**

- குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சாரதா பரஞ்சோதி

இன்னிசை கீதம் பாடி
        எழிலுறு குரல் வளத்தினாலே
மண்மிசை குயிலே என்ன
        மக்கள் தம் மனதை வென்றாய்
எண்ணரும் சங்கீத ஞானம்
        இணைந்தது வாழ்வில் ஒன்றாய்
பண்ணிய புண்ணியத்தினாலே
        பண்ணிசை சொத்தாய்ப் பெற்றாய்
மண்மிசை இசை ஞானத்தால்
        மாந்தரை மகிழ வைத்தாய்
எண்ணரும் இசையின் மிக்கோர்
        இறப்பரே இறவாதாரே!

மு. திருநாவுக்கரசு (விகடகவி)
ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி

**உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்**
**எண்பது கோடி நினைந்து எண்ணுவன — கண்புதைந்த**
**மாந்தர்குடி வாழ்க்கை மண்ணின் கலம்போல**
**சாந்துணையும் சஞ்சலமே தான்.**

- நல்வழி

**கற்றதனா லாய பயனென் கொல் லாலறிவான்**
**நற்றான் தொழாஅர் எனின்**

- குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு மாகாண சபை
Ministry Of Education, Cultural Affairs & Sports, Northern Provincial Council
கன்னியா வீதி, வரோதய நகர், திருக்கோணமலை
Kanniya Road, Varothayanagar, Trincomalee
Website: www.npc.gov.lk e-mail: npminedu@sltnet.lk
எனது இல / My No. உமது இல / Your No. திகதி / Date: 2007. 09.25

## திருமதி சாரதா பரஞ்சோதி அவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களும், கண்ணீர் அஞ்சலியும்

யா/ சங்கானை சிவப்பிரகாச வித்தியாலத்தில் சங்கீத ஆசிரியையாகக் கடமையாற்றிய திருமதி. சாரதா பரஞ்சோதி அவர்கள், வடக்கு மாகாணகல்வி அமைச்சின் பண்பாட்ட லுவல்கள் திணைக்களத்தினால் 30-09-2007 அன்று நடாத்த இருந்த காவிய கதா நடன நிகழ்வின் மாகாண மட்ட போட்டியில் கலந்து கொள்வதற்கான ஆயத்த வேலையில் இருந்த பொழுது 25-09-2007 (அன்று) அகால மரணம் அடைந்ததை அறிந்து அதிர்ச்சியடைந்தேன்.

நீண்டகாலம் இசைத்துறைக்குத் தனது பங்களிப்பை வழங்கிய ஓர் இனியகுரல் ஓய்ந்து விட்டது. இவரின் இழப்பினால் தவிக்கும் குடும்பத்தினர்க்கும், பாடசாலைச் சமூகத்திற்கும் அமைச்சின் சார்பில், எனது ஆழ்ந்த அனுதாபங்களையும் கண்ணீர் அஞ்சலியையும், தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றேன்.

**இ. இளங்கோவன்**
செயலாளர்
கல்வி பண்பாட்டவலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு,
வடமாகாணம்,
திருகோணமலை.

**மங்கலம் என்பது மனை மாட்சி மற்று அதன்
நன்கலம் நன் மக்கட் பேறு**

\- குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தற்காத்து தற்கொண்டாற் பேணி தகை சான்ற
சொற்காத்து சோர்விலாள் பெண்**

என்று இலக்கணத்தை நமக்கு வைத்திருக்கின்றார் வள்ளுவர் அவர்கள். அப்படிப்பட்ட வள்ளுவனுடைய வாக்கிற்கு இயல்பாக வாழ்ந்த ஒரு மாதரசியே திருமதி சாரதா பரஞ்சோதி எவராலும் மறக்க முடியாத ஒரு வாழ்க்கையை வாழ்ந்துள்ளார். என்பதற்குச் சான்றாக அவரது இறுதிக் கிரியைகளில் கல்விச் சமூகத்தினர் பலரும், உறவினர்கள், அயலவர்கள் மற்றும் பல இடங்களில் இருந்தும் பலரும் கண்ணீர் மல்க இறுதி அஞ்சலி செலுத்தியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஒரு நல்ல இசையாசிரியையாக, ஒரு தாயாக, ஒரு மனைவியாக, ஒரு மகளாக, ஒரு சகோதரியாக, ஒரு மைத்துனியாக என்று தனது வாழ்க்கையை இப்படித்தான் வாழ வேண்டுமென்று வாழ்ந்து திடீரென எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராத இடத்தில் எவருக்கோ வைத்த வேட்டுப்பட்டு தன்னுயிரை இம்மண்ணுக்கு ஆகுதி ஆக்கியுள்ளார்.

இவரின் மரணம் ஏற்படுத்திய பாரிய வெற்றிடத்தை எவராலும் நிரப்ப முடியாது. இவரின் மறைவினால் துயருற்றிருக்கும் அனைவரினதும் துயரங்களில் நாமும் பங்கேற்பதோடு இவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திப் போமாக.

**சரோஜினி இளங்கோவன்**
மாவட்ட நீதிமன்றம்
மல்லகம்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்**

- குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூத்த கலைஞர்களுடன் தியாகராசா உற்சவத்தில்
பஞ்சரத்தின கீர்த்தனை பாடுகின்றார்




வலிகாமம் கலாசார பேரவை நடாத்திய கலாசார
விழாவின்போது பாடுகின்றார்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

ஆசிரியை சாரதா அவர்கள் இளம்வயதில் இவ்வுலகை விட்டுப் பிரிந்தமை குடும்பத்தினருக்கும் இசைத்துறைக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும். கர்நாடக இசையை உரிய முறையில் கற்று உயர்பட்டம் பெற்ற இவர் பல்கலைக்கழக விரிவுரையாள ராகவும், ஆசிரியராகவும் சீரிய பணியாற்றிப் பல நூறு மாணவர்களை இசைத் துறையில் வளர்த்தவர்.

தனது இனிமையான குரலில் இசைக் கச்சேரிகளைக் சிறப்பாக நடாத்தும் இவருக்கென ஒரு தனியான ரசிகர் கூட்டம் கூடுவதை நாம் அறிவோம். சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் இசைத் துறையில் பல தேசிய விருதுகளை இலங்கைத் தமிழ்த்தினப் போட்டிகளில் பெறுவதற்கு மாணவர்களைப் பயிற்றுவித்தவர் அமரர் சாரதா அவர்கள்.

மாகாண மட்டக் காவியக் கதாநாட்டியப் போட்டிக்கு அடுத்த நாள் மாணவர்களை அழைத்துச்சென்று வெற்றியோடு திரும்புவார் என எதிர்பார்த்த எமக்கு காலன் சதி செய்து விட்டான்.

இவரது பிரிவால் துயருறும் அன்புப் பிள்ளைகள், ஆருயிர்க் கணவன், உறவினர்கள், பாடசாலைச் சமூகத்தினர், நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை வலிகாமம் கல்விச் சமூகத்தின் சார்பில் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திபெற இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.

வலிகாமம் கல்வி வலயம்
மருதனார்மடம்,
சுன்னாகம்.

**ப. விக்கினேஸ்வரன்**
வலயக்கல்விப் பணிப்பாளர்

**நவில் தொறும் நூல் நயம் போலும்**
**பயில் தொறும் பண்புடையார் தொடர்பு**

- குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

யா/ சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய இசை ஆசிரியை திருமதி சாரதா பரஞ்சோதி அவர்கள் பாடசாலை சார் கல்விப்புலத்தில் சேவை ஆற்றிய காலம் குறுகியதாயினும் அவர் ஆற்றிய கனதியான பணிகள் என்றும் மறக்க முடியாதபடி மாணவச் செல்வங்களின் உள்ளத்தில் என்றும் பசுமையான நினைவுகளாக அவர்களின் உள்ளத்துடன் உணர்வுடன் இரண்டறக் கலந்துள்ளது என்றால் மிகையாகாது.

கற்பித்தற் செயற்பாட்டின் மூலம் மாத்திரமன்றி தனது நாளாந்த நடத்தைக் கோலங்கள் வடிவில் மாணவர்களின் ஆளுமை விருத்தியில் மதிக்க வொண்ணாச் செல்வாக்குச் செலுத்தியவராவார். கடமையில் கண்ணும் கருத்துமாய் அன்பு செலுத்துவதில் தெய்வமாய் அடக்கம், பொறுமை, நிறுவன வசதிகளை அனுசரித்து ஒழுகுதல்போன்றநல்ல குணாம்சங்களின் சிகரமாக கல்விப் புலத்தின் இமயமாக இசை அரசியாக மட்டுமன்றி சமய சமூக விழாக்களிலும் தனது முத்திரையைப் பதித்துவிட்டு அகால மரணமடைந்த நல் ஆசிரியத் தவக் கொழுந்துக்கு வலிகாம கல்வி வலயம் சார்பாக எனது இதய பூர்வ அஞ்சலியைச் செலுத்துவதுடன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களை இறைஞ்சுகின்றேன்.

**சு. சுந்தரசிவம்**
பிரதிக்கல்விப் பணிப்பாளர்
கல்வி நிர்வாகம்.

**அன்பிலார் எல்லாம் தமக்குரியார் அன்புடையார்**
**என்பும் உரியார் பிறர்க்கு**

**- குறள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலா வித்தகர் திருமதி சாரதா பரஞ்சோதி அவர்களின் கலைப்பணி

மண்ணில் பிறந்தோர் எல்லாம் மடிவது இயற்கை எனினும் கலாவித்தகர் இசையாசிரியை திருமதி சாரதா பரஞ்சோதி அவர்களின் இழப்பு கலை உலகிற்குப் பேரிழப்பாகும். இவ்வுலகில் வாழும் காலத்தில் மாணவர்களின் வளர்ச்சிக்காக அறிவு, அன்பு, பண்பு, அடக்கம் என்பவற்றைத் தன்னகத்தே கொண்டு பணியாற்றிய நல்லுள்ளம் பவளவிழாக்காண உள்ள எமது வட இலங்கைச் சங்கீத சபை வரலாற்றில் ஞாபகத்திற்குரிய ஒரு கலைஞர். சபையின் பரீட்சைப் பெறுபேறுகள் உரிய காலத்தில் வெளிவர உழைத்த பரீட்சகர்களில் இவரும் ஒருவர். சங்கீத சபை நிகழ்வுகளில் தவறாது கலந்து சிறப்பிக்கும் ஒரு இசை ஆசிரியர், கல்விப் புலத்திலே இவருடைய பெரும் பணியினால் பல இசைத்துறை சார்ந்த மாணவர்கள், கலைஞர்கள், உருவாகி உள்ளனர். இதற்கு தான் பணியாற்றிய பாடசாலைப் பணிகள், இராமநாதன் நுண்கலைப்பீட விரிவுரையாளர் பணி, தனது கிராம ஆலயங்களின் சமய கலைப் பணியினை சுட்டிகளாக ஆக்கியுள்ளார். தொடர்ந்து இவற்றை முன்னெடுத்துச் செல்வதே இவரது மாணவர்கள் குருவிற்கு ஆற்றும் குரு தட்சணையாகும். வடஇலங்கைச் சங்கீத சபையின் குடும்பத்தின் சார்பிலும் கல்விப் புலத்தின் சார்பிலும் அம்மையாரின் ஆன்ம ஈடேற்றத்திற்கு எல்லாம் வல்ல ஆடற் தெய்வமான நடராஜப் பெருமானின் பாதங்களை வேண்டிப் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

**வே. தி. செல்வரத்தினம்**
கல்விப்பணியாளரும்,
வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்
யாழ்ப்பாணக் கல்வி வலயம்

**பணிவுடையான் இன் சொலன் ஆதல் ஒருவற்கு**
**அணியல்ல மற்றுப்பிற**

- குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கை நகர் சிவப்பிரகாசம் சிந்தை கலங்கி நிற்குதம்மா! செந்தமிழ் இசைத்த இசைக்குயில் சிறகொடிந்து போனதம்மா!

செந்தமிழும் சிவநெறியும் தழைத்தோங்கும் சங்கை நகர்மண் சோபை இழந்து தவித்த நாள் ... நெஞ்சம் மறக்குமா இந்நாளை..

வழக்கம் போல காலை எழுந்து பாடசாலைப் பணிக்காக விரைந்து வந்தவேளை...

பாடசாலை மணியோசை கேட்க இருந்தவேளை வெடியோசை ஒன்று கேட்டது. வெடியோசை நம் வாழ்வில் சகஜமாகி விட்டதல்லவா! நாம் நம் பணிகள் தொடர்ந்தோம். காற்றில் ஓர் செய்தி வந்தது. "காலன் நம் இசைக்குயில் உயிரையும் பறித்து விட்டான் என்று..." நெஞ்சம் கனத்தது, விழிகள் நீர்மழை பொழிந்தன, விதியின் செயல் என்று இறைவனை நொந்து மனம் ஆறக்கூடிய இழப்பா இது!

இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் சாதனைகள் படைத்து, சாந்தமே உருவாக சிரித்த முகத்துடன் சிவப்பிரகாச வளாகம் நுழைந்தது. முதல் மரணம் தன்னை அணைக்கும் வரை அவர் எம் மாணவர்களிற்காக எமது மண்ணிற்காக ஆற்றிய பணிகளை இயம்பிட வார்த்தைகள் உண்டோ?

எமது ஆசிரியை எம் மாணவ மணிகளின் ஊடாக ஆற்றிய ஆற்றுகைப் படிகளை எண்ணிப் பார்க்கின்றோம்.

2003இல் குழு இசை தேசியமட்டத்தில் இரண்டாம் இடம் பெற்று வெள்ளிப் பதக்கங்களை பெற்றமை.

2004இல் தனி இசை மாவட்டமட்டம் இரண்டாம் இடம் பெற்றமை.

2005இல் குழு இசை மாவட்ட மட்டம் முதலாம் இடம் பெற்றமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006இல் குழு இசை மாவட்ட மட்டம் முதலாம் இடம் பெற்றமை.
பாடசாலை மட்ட, கோட்டமட்ட, வலயமட்ட போட்டிகளில் பங்கேற்று பரிசில்கள் பெற்றமை.
சகலகலாவல்லி மாலை ஓதற்போட்டி, திருமுறை ஓதற்போட்டி, அழகெழல் போட்டி ஆகியவற்றில் முதல் மூன்று இடங்களையும் பெற்றமை.

போன்ற பல செயற்பாடுகளை எமது மாணவர்களினூடாக ஆற்றிய பெருந்தகை மேலும் தித்திக்கும் தனது தேமதுரக் குரலோசையால் எமது பாடசாலை விழாக்கள், பிரதேச கலாசார விழாக்கள், நல்லைக்கந்தன் திருவிழாக்கால இசைநிகழ்வுகள், எமது மாணவர்களின் நடன, நாட்டிய நாடக நிகழ்வுகள் போன்றவற்றை மெருகூட்டிய இசைக்குயிலை இழந்து நாம் தவிக்கின்றோம். இனி யாருளரம்மா இவ் வையகத்தில் இவர் இடம் நிரப்ப? எமக்காக இசைபாட?

காலத்தின் சதியால் காலன் கைப்பட்ட எம் ஆசிரியையின் ஆத்ம சாந்திக்காக வேட்டாள வைரவனை வேண்டிப் பணிகின்றேன்.

**திருமதி. ச. யோகேஸ்வரன்**
அதிபர்
சங்கானை சிவப்பிரகாச
மகாவித்தியாலயம்.

**மறவற்க மாசற்றார் கேண்மை துறைவற்க**
**துன்பத்துள் துப்பாயார் நட்பு**
- குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வரின்
# இதய இரங்கல் மடல்

"எத்தனை காலம் மனிதன் வாழ்ந்தான்;
என்பது கேள்வி இல்லை! அவன்
"எப்படி வாழ்ந்தான்" என்பதை உணர்ந்தால்
வாழ்க்கையில் தோல்வி இல்லை!!"

என்கிற 'எம்.ஜி.ஆர்' திரைப்படப் பாடலுக்கு உரியநல்ல இலக்கணமாகத் திகழ்பவர் அமரர் திருமதி சாரதா பரஞ்சோதி அவர்கள். நீண்ட நெடுங்காலமாக யாழ்ப்பாணக் கல்லூரி வளாகத்தில் கற்றுத்தேறியவர்! என் கீழ்ப்படிவுள்ள மாணவி! இளம் வயதிலிருந்தே இசைக்கலையிலே பேராற்றலும் பெரும் ஈடுபாடும் உடையவர்! பின்னர் அந்த இசைத்துறையிலே பல்கலைக்கழகப் பட்டம் பெற்று, இசைக்கலை ஆசிரியையாகிப் பல மாணவ, மாணவியரை இசைத்துறைக்கு ஆற்றுப்படுத்திய பெருமைக்குரியவர்!

இசைக்கலையையே தன் உயிர்மூச்சாகக் கொண்டியங்கிய இவரின் தந்தை அமரர் திரு. சச்சிதானந்தன் அவர்கள் எமது யாழ்ப்பாணக் கல்லூரியின் பேராசானாகவும் கல்லூரிச் சாரணர் இயக்கப் பொறுப்பாளராகவும் பெருந்தொண்டாற்றியவர். தந்தைக் கேற்ற மகளாக சாரதாவும் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திலே ஆசிரியப்பணி செய்து, மாணவப் பயிர்களைத் தழைத்துச் செழிக்க வைத்தார். இவரின் இளைய சகோதரி திருமதி கோமளா தெய்வேந்திரன் என் நிர்வாகத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியையாகப் பணிபுரிகிறார். இவரும் யாழ்ப்பாணக் கல்லூரிப் பழைய மாணவியே. இவரின் ஒரேயொரு சகோதரன் திரு. ச. கோவிந்தராஜன் கூட யாழ்ப்பாணக் கல்லூரியிலே தன் கல்விப்பேறைப் பெற்றார். ஆக, திருமதி சாரதா பரஞ்சோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் குடும்பமே எமது யாழ்ப்பாணக் கல்லூரிக் குடும்பமாக, ஒரே குடையின் கீழ் வீற்றிருந்த 'அந்தக்கால ஞாபகக்கடல்' எனது மனதிலே அலைவீசி ஆர்ப்பரிக்கின்றது. அந்தவேளையிலே அமரர் சாரதாவின் 'அகாலப் பெருமரணம்' என்கிற வேதனைச் சூறாவளி என்னுள்ளே வீசிச் சுழன்றடித்து நிகழ்காலக் கொடுமைக்குள் என்னைத் தரதரவென இழுத்து வந்து விடுகின்றது. அமரர் சாரதாவின் பேரிழப்பினால் துயருறும் அவரின் குடும்பத்தாருக்கு என் இதயம் உருகும் அனுதாபத்தைத் தெரிவிக்கின்றேன். எல்லாம் வல்ல இயேசு கிறீஸ்து அமரர் சாரதாவுக்கு ஆன்ம இளைப்பாறுதல் தருவராக!

இவ்வண்ணம்
**திரு. நோயல் ஏ. விமலேந்திரன்**
முதல்வர்

வட்டுக்கோட்டை - யாழ்ப்பாணக் கல்லூரி.
18-10-2007

**சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க்கணி**

- குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாங்கு வாழ்ந்தவர்

என் அன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய மாணவி திருமதி சாரதா பரஞ்சோதி அவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய கோட்பாட்டைக் கொண்டவர் இவர் தனது கடமைக்கு உரிய நேரத்திற்குச் செல்ல வேண்டியதால் அன்று காலை செல்லும் வழியில் சித்தன்கேணியில் கிளைமோர் குண்டு வெடித்த அதிர்ச்சியில் உடன் இயற்கை எய்தி விட்டார் என்ற செய்தி எனது உறவினர் ஒருவர் மூலம் அறிந்தேன் நம்ப முடியாது திகைத்தேன்.

விதியின் விளையாட்டை யாரறிவார். இவர் மூளாய் ஆங்கில ஆசிரியர் திரு. சச்சிதானந்தம் தம்பதியினரின் மூன்றாவது பிள்ளை சிறுவயதிலிருந்து என்னிடம் இசைக்கலை பயின்றவர். இருபத்தைந்து வருடங்களாக இவர் தனது இசைக் கலையை கற்றும் கற்பித்தும் தனது சாதனைகளை நிலை நாட்டினார்.

மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் சூழலில் வாழ்ந்த இசைப்பெரியார்களான வலங்கைமான் ஆறுமுகம் அவரது மருமகன் சகலகலாவல்லவன் மாசிலாமணி போன்றோர் அக்காலத்தில் இசைக்கலையில் பிரபல்யமானவர்கள். இவர்கள் மேற்கூறிய ஆலயங்களில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுப்பிரார்த்தனை செய்து சிறார்களுக்கு இசைமூலம் இறை பக்தியை ஊட்டியவர்கள்.

இச்சூழலில் சாரதாவின் குடும்பமே இசையை கற்கவும் இரசிக்கவும் வாய்ப்புக் கிடைத்தது. இவ்வாறு வளர்ந்த அமரர் முப்பது வருடங்களில் வெகுவிரைவாகத் தனது இசை ஆற்றலை வளர்த்து நாடறிந்த முதற்தரமான இசைக்கலை விற்பன்னராகத் திகழ்ந்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைக்கலைமாணி, இசைக்கலாவித்தகர், இசை விரிவுரையாளர், இசை ஆசிரியர் ஆகிய சிறப்புகள் ஒவ்வொன்றிலும் தனது உச்சமான திறமையை வெளிப்படுத்தி இசைக்கலாரசிகர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் யாவரதும் மனதில் நீங்காத நினைவுகளை ஏற்படுத்தி விட்டார்.

கண்ணிறைந்த கணவன் அவருக்கு அனுசரணையாயிருந்து செயற்பட்டமை இவரது திறமை வெளிப்பாட்டுக்குப் பெரிதும் உதவியது. தந்தை, சகோதரர் ஆகியோரின் இழப்பு இக்குடும்பத்திற்கு பெரிதும் துயர்தந்தது. எனினும் தனது விடா முயற்சியும் ஆர்வமும் அக்கறையும் இவரது சிறப்புக்களுக்கு காரணமாகி விட்டன.

## சேவைகளும் சாதனைகளும்

- ❖ வடஇலங்கைச் சங்கீதசபைப் பரீட்சைகளில் உயர் தரங்களுக்கு பரீட்சகராகவும் கருத்தரங்கில் விரிவுரையாளரா கவும் கடமை ஆற்றினார்.
- ❖ இலங்கை இளங்கலைஞர் மன்றம் நடாத்தும் இசைவிழாவில் இசையரங்கைச் சிறப்பாகச் செய்து ரசிகர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர்.
- ❖ இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் சிலகாலம் போதனாசிரியராகக் கடமையாற்றி மாணவர்களுக்கு நுட்பமாக பாடந்தர சுத்தமாகப் பயிற்றிய பெருமைக்குரியவர்.
- ❖ பிரத்தியேகமாகப் பல மாணவர்களுக்குக் கற்பித்து உயர்வடைய உதவியவர்.
- ❖ இறுதிக்காலத்தில் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய மாணவர்களைத் தயார் செய்து இசைப்போட்டியில், தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றச் செய்து பரிசு பெற வைத்த பெருமைக்குரியவர்.
- ❖ இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் A. பிரிவு வாய்ப்பாட்டுப் பாடகராகவும், அகில இலங்கைக் கம்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகத்தில் இசையரங்கு நிகழ்த்தும் வாய்ப்பினைப் பெற்றவராகவும் உள்ளவர்.

- மூளாய் வதிரன்புலோ விநாயகர் பேரில் ஆக்கப்பட்ட பாடல்களை இசையமைத்து ஒலிப்பதிவு செய்து கிராம மக்களின் உள்ளங்களிலும் உறைந்துள்ளார். திருவாசக முற்றோதல் மற்றும் வருடாந்த உற்சவங்களின் போதும் இசைக்கலைஞர்களை அழைத்து இசையரங்கினை ஒழுங்கு செய்து நடாத்தியவர்.

இவர்களது வாழ்நாளில் பெரும் பகுதி நாட்டின் அசாதாரண சூழலே காணப்பட்டது. இத்தனை சிரமங்களுக்கு மத்தியிலும் தனது இசை ஆர்வத்தைப் பலகோணங்களில் வெளிப்படுத்தி குறைந்த வயதில் யாரும் சாதிக்க (செய்ய) முடியாத காரியங்களையும் தனது திறமை, பண்பு, அன்பு, புரிந்துணர்வு ஆகிய பண்புகளால் செய்து முடித்து எம்மை எல்லாம் துயரத்தில் ஆழ்த்திவிட்டு இறைபதம் அடைந்துள்ளார். இவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

இவரது அபிமானத்துக்குரிய ஆசிரியர்
**சு. கணபதிப்பிள்ளை**

| |
|---|
| **யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்**<br>**சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு**<br>- குறள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளத்தில் ஒளிரும் சுடர்

அருமைக் குணமுடைய என் அன்பான சாரதாவே – உன்
அகாலமரணம் எதிர்பாராத அதிர்ச்சியை ஊட்டுகிறது
கருமை நிறைந்த காலன் எங்கு உமைக் கொண்டு சென்றான்
பெருமை மிகுந்த இந்தப் பேருலகில் - வாய்ப்பின்றி
மறுமை உலகிற்கு மாண்புடனே சென்றீரோ.

இளமை முதல் இன்றுவரை நான் என் மாணவியே
இனிமையான உந்தன் குரலோசை கேட்பதெப்போ!
அழகான தமிழில் அமுதக் கவியெழுப்பும் கவிக்குயிலே
கனிவான மொழி பேசும் உன் வார்த்தையை இனி கேட்பேனோ!

இசைபாடும் தொண்டினை இடையறாது செய்வதனால்
இசைப்பிரியனான இறைவன் உனை இளமையிலேயே ஈர்த்தாரோ
நேற்றுப் பார்த்தோம் இன்று காணோம் ஊரெல்லாம் ஓலம்
உன்பிரிவால் உள்ளம் எல்லாம் பதைபதைப்பு.

ஆடி ஓடி அலுவல்கள் பல புரிந்து
ஓடி ஓடி உழைக்கும் எந்தன் மாணவியே
பாடிப்பாடி பலபுகழ் பெற்றுவிட்டாய்
வாடிய மலராக வாழாது நீர் எங்கு சென்றீர்.

கல்வியைக் கருத்துடனே கவனமாய் கற்றதனால்
பல்கலைக் கழகத்தில் பட்டங்கள் பெற்றீர்
வல்லவளாக நீ வாழ்வில் சிலகாலம்
பல்கலைக் கழகத்தில் விரிவுரையும் ஆற்றிவிட்டீர்.

ஏனம்மா நீ எங்களை விட்டு பிரிந்து
இத்தனை சீக்கிரம் எங்கு சென்றிட்டீர்
அருமைக் கணவன் அலறித் துடிக்க
ஒரு கணப்பொழுதில் ஓடி ஏன் மறைந்தீர்.

பெற்றவள் மனம்புலம்பித் தவிக்க
அருமைப் பிள்ளைகள் அலறிக் குழற
உன் உடன் பிறந்தவர் ஓலமிட்டலற
உற்றவர் உறவினர் உமை நினைக்க
உயர்வு பெறவோ எமைவிட்டுச் சென்றீர்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**திருமதி. வி. இராஜநாயகம் (விஜி ரீச்சர்)**
இசை ஆசிரியர்
வட்டு இந்து நவோதயா கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

எமது புகழ்பெற்ற இராமநாதன் நுண்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்று இசைக்கச்சேரிகளிலும், பிறஇசை நிகழ்வுகளிலும் சிறப்படைந்து வரும் திருமதி சாரதா அவர்களின் துர்மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தேன். 1979-1989, 10 ஆண்டுகள் நான் இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் பணிபுரிந்தபோது 1985இல் சாரதா மாணவியாக அனுமதி பெற்றார். மாணவப் பருவகாலத்திலேயே ராகஞானம், கற்பனஸ்வரம் பாடுவதில் சிறந்து விளங்கினார். கர்நாடக இசைக்கலைஞர்கள் உருவாகுவது என்பது மிகச் சிரமம் என்பதை அனைவரும் அறிவர். அத்துடன் இசை கற்பவர்கள் அனைவரும் கச்சேரி வித்துவான்களாகவும் மிளிருவதில்லை. வெகு சிலரே மேடைக் கச்சேரியிலும் புகழ்பெறுகிறார்கள். இந்நிலையில் சாரதா அவர்கள் தனது திறமையில் இராமநாதன் நுண்கலைக் கழகத்திற்கு பெருமை சேர்த்தவர். எதிர்காலத்தில் மேலும் சிறப்படைந்து இருக்க வேண்டிய நிலையில் விளங்கிய சாரதா அவர்களின் கொடூர மரணம் கர்நாடக இசைக்கு பேரிழப்பாகும்.

அனைத்து ஆசிரியர்களிடமும் பணிவுடனும், இசை ரசிகர்களிடம் பண்பாகவும், பணிவுடனும் பழகும் இவரது தன்மையும் மறக்க முடியாதவை. அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள். சாரதா அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவன் அருளை நாடுகிறேன்.

"சங்கீதவித்துவான்"
A. K. **கருணாகரன்**
(இசைவிரிவுரையாளர்)
(ஓய்வு)

C, 2/6 அன்டர்சன் மாடி
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளங்கலைஞர் மன்றம்
நடாத்திய இசைப்போட்டியில்
வெற்றி பெற்றமைக்காக
திருமதி காமினி
திசநாயக்காவிடமிருந்து
பரிசு பெற்றமை.



நுண்கலைமாணி
பட்டமளிப்பின்போது...



மாணவியாக இருந்த
காலத்தில் செய்த
இசைக்கச்சேரி



இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெற்ற இசையரங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "இளம் இசைப்பூங்குயில் சாரதா"

சாரதா நமது அன்பின் உயர் மாணவி அவரிடம் பல நல்ல குணாதிசயங்களின் குருபக்தி - ஆசாரம் சிரத்தை – வேகம் விவேகம் இவையெல்லாம் சாரதாவிடம் காணப்பட்ட சிறப்பியல்புகளில் ஒரு சில.

நல்லைக்கந்தன் உற்சவத்தில் நாவலர்மணி மண்டபத்தில் சாரதாவின் ஆற்றுகையில் மகுடமாக அவர்பாடிய "பிருவந்தாவன சுரங்கள்" இசை வித்தியாசம் இன்றும் காதில் ஒலித்த வண்ணம் ரீங்காரமிடுகின்றது.

நமது மாணவரில் நன் மாணவியாக பெயர்சொல்லக் கூடிய இளம் இசைக்குயில்ஆகச் சாரதா நம்மை எல்லாம் கவர்ந்து நின்றார். மிகச்சிறந்த எதிர்காலம் அவருக்கு இருக்கின்றது உயர் பதவிவாய்ப்புக்கள் அதிகம் இருகின்ற இவ்வேளையில் அவரின் மறைவு உள்ளத்தை மிக ஆழமாக வேதனைக்குள்ளாக்கி விட்டது.

என்றும் அவர் அழியாத இசைப்பூங்குயில் ஆக இசை மாணவர்க்கு ஒரு உதாரணமாகத் திகழ்வார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

அவரது பிரிவால் வாடும் அம்மா, மற்றும், குழந்தைகள் இருவர், அன்புக்கணவர், பிரியமான தங்கை அனைத்து உறவினர்க்கும் இறைவன் நல்வழியைத் தரவேண்டும். அவர் ஆத்மா இறைவனுடன் இயைந்து பேரானந்த நிழல் பெறுவதாக இ.நு.க வலையத்தின் சார்பாகவும் தனிப்பட்ட முறையிலும் நமது ஆழ்ந்த அனுதாபங்களை அவர் குடும்பத்தார்க்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுபம்.

**ந. வி. மு. நவரத்தினம்**
இ. நு. கழகம்
யாழ். பல்கலைக்கழகம்
இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு...

பிறந்த மண்ணின் பெருமையை விளங்க வைக்க மூளாயில் பிறந்து, சாரணீயத்தில் தன்னை அர்ப்பணித்த சான்றோனின் மகளாய்த் தோன்றி தந்தையின் சேவையைப் போன்று தானும் தனது உடல், பொருள், ஆவியைக் கல்விக்காக அர்ப்பணித்த செம்மல்.

"இசைக்கு மயங்கா இதயமுண்டோ" இசையினூடாக எல்லோர் இதயங்களையும் கவர்ந்து "மூளாய்ச் சகோதரிகள்" என்ற பெயரை நிலைநிறுத்தியவர்கள், மாணவச் செல்வங்களுடன் இனிமையாகவும், சளையாத மனத்துடனும் உறவாடி இன்னிசை கற்பித்து அவர்களைத் தேசியம் வரை உயர்த்திப் புழகாங்கிதம் அடைந்தவர். இவைமட்டுமன்றிச் சங்கானைப் பிரதேச கலாசார நிகழ்வுகள், ஆலய நிகழ்வுகளில் இசைபாடி மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்துக்கொண்டவர்.

யான் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில அதிபராக இருந்த வேளை தமிழ்த்தினப்போட்டி மட்டுமன்றி பாடசாலையின் அனைத்து நிகழ்வுகளிலும் திறம்படத் தானும் பங்கேற்று, பிள்ளைகளையும் பயிற்றுவித்து நிகழ்வுகள் சிறப்புற உதவிய பெருந்தகை இப்படிப்பட்ட பெருந்தகை ஒருவரது இழப்பு கல்விச் சமூகத்திற்குப் பேரிழப்பாக அமைவதோடு, ஜீரணிக்க முடியாத ஒன்றாகவும் உள்ளது.

இசை பாடி இறைவனைத் துதிக்க வழிகாட்டுகின்றது நம் மதம். இவ்வழியில் மூளாய்ப் பிள்ளையாருக்காக தனது இனிய குரலால் "வதிரகானங்கள்" என்னும் இசைப்பேழையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டுத் தானும், தன் உறவுகளும் இறை இன்பம் பெற வாழ்ந்தவர்.

"நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

அன்னாரின் திடீர்மறைவு குடும்பத்தாருக்கு மட்டுமல்லாது இசைப்பிரியர்கள். மாணவச்சமூகம், கலாரசிகர்கள் அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். கிருஷ்ண பரமாத்மாவின் கீதை உபதேசம் போன்று" எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு" என்பது போல படைத்தவன் அழைத்துவிட்டான். நாம் என்ன செய்யமுடியும்? எம்செயலால் யாதொன்றும் இல்லை பாரபரனே. அவரது ஆத்மா இறைநிழலில் சாந்தி பெற இறைஞ்சுகின்றேன்.

**ச. கைலாசநாதன்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
தெல்லிப்பழைக் கோட்டம்

(முன்னாள் அதிபர்,
யா/ சங்கானை சிவப்பிரகாச ம.வி)

**ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம் பொறுத்தார்க்கு
பொன்றுந் துணையும் புகழ்**

**- குறள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கைக் கல்லூரியில் சங்கமித்த சங்கீதத்தைத் தேடி...

எமது பாடசாலையில் சங்கீதபாட ஆசிரியையாகப் பணியாற்றிய அமரர் திருமதி. சாரதா பரஞ்சோதி அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி எமக்கெல்லாம் அதிர்ச்சிக்குரியது.

பாடசாலையிலே கற்பித்தற் செயற்பாட்டிலும் ஏனைய பொறுப்புக்களிலும் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் ஈடுபட்ட பெருந்தகை அதிலும் சங்கீதத்தால் அதிபர், ஆசிரியரையும் தம் வசப்படுத்திய சங்கீத ஜோதி. பாடசாலையின் பெயரை சங்கீதத்தால் கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் தேசியம் எனப் பல விடயங்களிலும் பரவவும் பதியவும் வைத்த பெருமைக்குரியவர் எமது ஆசிரியை தான் இருக்குமிடம் அனைத்திலும் பேச்சினாலும், தம் இனிய குரலினாலும் மகிழச்சியையே மலரவைத்த எம் சக ஆசிரியை நாம் இழந்து தவிக்கின்றோம். காலன் தான் கணக்கில் தவறிழைத்தானா? இல்லை அவர்தான் பாடிக்களைத்துத் தன் ஓய்விற்காகச் சென்றாரா? விடை தெரியாது தவித்தாலும் நாம் அவர் இறைவனடியில் அமைதி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

**ஒழுக்கத்தின் மேன்மை எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி**

**- குறள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SRI LANKA SCOUT ASSOCIATION
இலங்கை சாரணர் சங்கம்

யாழ்.மாவட்ட சாரணர் கிளைச் சங்கம்
JAFFNA DISTRICT SCOUTS BRANCH ASSOCIATION

S. Aehambaranathan
Jaffna District Scout Commissioner

## இலங்கை சாரணர் சங்கத்தின்

# இரங்கல் செய்தி

சேவைச் செம்மல் தியாகத் திருமகன் யாழ் மாவட்ட சாரணர் ஆணையாளர் அமரர் சச்சியின் கலை மகளே! பத்திரிகையில் பார்த்துப் படித்த செய்தி நம்பவே முடியவில்லை அம்மா! அன்று அப்பாவின் பூதவுடல் புகழுடலாக பூமாலைகள் நடுவில் கண்ட காட்சி இன்னும் மறையவில்லை. இசையரசியே இன்று அதே காட்சியைக் கண்டு குளமாகி விட்டதம்மா என் கண்கள். விதி செய்த சதியோ சாரதா பரஞ்சோதி முகாரியால் இசைபாட வைத்ததேனோ? நற்றமிழிசைக்காய் நல்லூருக்கு நாளும் நாடி வரும் கலைக் குழுவில் நீ ஒரு அங்கம். அங்கு நல்லிசை தந்து மகிழ்வித்த வித்தகியே அப்பாவும் அக்காவும் உன்னை இசைபாட அழைத்தனரோ.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சு. ஏகாம்பரநாதன்**
யாழ் மாவட்ட சாரணர்
ஆணையாளர்

**ஏதிலார் குற்றம் போல் தங்குற்றம் காண்கிற்பின்**
**தீதுண்டோ மன்னும் உயிர்க்கு**

- குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குயிலொன்று குரலிழந்தது

இசையென்ற துறை நுழைந்தவள்
இதயங்கள் தொறும் நிறைந்தவள்
பணிசெய்து செய்து வாழ்வினைப்
பயன்செய்த பசும்பொன் ஆனவள்

குயிலொன்று குரலிழந்தது
நாமெல்லாம் செயலிழந்தனம்
மண்ணின்று நிதியிழந்தது
மழலைகள் தாயிழந்தனர்

என்னென்று ஆறுகின்றதோ
எவ்வாறு தேறுகின்றதோ
பெண்ணென்று பார்க்கவில்லையே
பின்னென்ன பேச்சிருக்குது?

மரணங்கள் மிக மலிந்தன
மௌனங்கள் மொழியை விஞ்சின
விதியென்று அமைதி கொள்வதோ!
விபத்தென்ற புரளி வெல்வதோ!

இனியந்த நகைமுகம் இல்லை
இனியந்த இன்னிசை இல்லை
தனியெங்கள் பயணம் அம்மவோ
சாரதா நீ சென்ற தெவ்வழி?

**கவிஞர் சோ. பத்மநாதன்**
தலைவர்
இளங்கலைஞர் மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைத்தாலே நெஞ்சு சுடும்!

மென்மை, அன்பு, புன்னகை
இவை சாரதாவை நினைத்ததும் நெஞ்சில் வரும் அடையாளங்கள்
யாரையும் நோகச் செய்யாத மென்மைப்போக்கு
அதிர்ந்து பேசத்தெரியாத மெல்லியப்பு
அத்தகைய ஒரு உன்னத புஷ்பம்
இரத்த வெள்ளத்தில் வீழ்த்தப்பட்டதாம்
நினைத்தாலே நெஞ்சு சுடும்
எங்கள் கழக மேடைகளை,
தன் இசையால் நிரப்பிய பூங்குயில்
இன்று இல்லையென நினைக்க நெஞ்சு பதறுகிறது
வாழும் வயது, வளரும் அறிவு,
நீளவேண்டிய அவள் ஆயுள் நின்றுபோனது
இம்மண்ணிற் பிறந்ததுதான் அவள் செய்த குற்றமோ?
இடையிடை பழகிய எங்கள் மனமே இத்துணை வருந்துகிறது
கணவன், பிள்ளைகள் கதி?
'பரந்து கெடுக இவ்வுலகியற்றியான்'
வள்ளுவனைப் போல பிரமனைச் சபிக்கத் தோன்றுகிறது
அந்த உத்தமப் பெண்ணின் ஆத்மா சாந்தியடைய,
அவளை அறிந்த அத்தனை பேரும் பிரார்த்திப்பர்.
கம்பன்கழகம் கண்ணீரோடு அவள் நினைவைப் போற்றுகிறது
'இன்பமே எந்நாளும் துன்பமில்லை'

கம்பவாரிதி
**இ. ஜெயராஜ்**
கம்பன் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசையாரை இசையால் இசைவித்து இசைபெற்ற...

இசைமாணி சாரதா இசைந்தாளோ – வசையறியா
பூதவுடல்நீத்துப் புகழுடம்புமீதேறி
நாதனடி நண்ணிட நயந்து.

திருக்கைலை மலையினிலே திருத்தொண்டர் சபைநடுவே
திருவம்பலக் கூத்தன் திருவடிக்கீழ் திருவாய் திறந்து
திருவடியார் தமைமறந்து கசிந்துருகி மெய்சிலிர்க்க
திருவாசகம் பாடித் திளைத்துருகி மெய்ம்மறந்து மகிழ்கின்றாய்
இன்று

என்று என் ஏழை மனம் ஏங்கித் தவிக்குதிங்கே
இன்று உன் பிரிவுத்துயர் தாழாது பட்டுவந்து பாடுகிறேன்
என் பாட்டிற் பாடுகிறேன் தன்பாட்டிற் கேட்டிருப்பாய்
உன்பாட்டின் ஒலியிங்கே என் செவியிற் கேட்கிறது
அன்று

சச்சி அருந்ததியின் தவத்திரு வாழ்வினிலே
இச்சைக்குரிய இனிய மகள் சாரதா நீ
பச்சைக் குழந்தை மனம் பண்படக்கம் கொண்ட
நச்சைப்படாத பல பட்டம் பதவி பெற்றாய்
எச்சமின்றிச் சங்கீதக் கடலினது கரை கண்டாய்
பல்லவிபாடும் வல்லமையொன்றே சான்று நீ
நல்ல சங்கீத ஞான உயர்நிலை மேதையெனச் சாற்ற
பெற்றார்க்குத் தவப்பேறு பிறந்தார்க்குத் தோள் வலிமை
உற்றார்க்கு உற்றதுணை ஊரார்க்கு உதவு கரம்
கற்றார்க்கு கவின் கலை மாற்றாரும் மதிக்கும் மாண்பு
கொழுநலனுக்குக் குலக்கொழுந்து குழந்தைகளின் நல்மாதா
கெழுதகை நட்பின் கேடில் விழுச்செல்வம்

நடுநிலைதவறாது மாணவர் திறனறிந்து
அடுதிறத்தால் ஆய்ந்தவரை இனங்கண்டு வழிநடத்தி
பள்ளியுயர்வுக்காய்ப் பகலிரவாய்ப்பாடுபட்டாய்
தள்ளியே நில்லாது தானதுவாயுறக்கலந்து
வென்றி பல தந்தாய் விளங்கு சிவப்பிரகாசப்பள்ளி
குன்றிலிட்ட தீபமெ நின்று ஒளி வீசுதம்மா
பிறப்பினாற் சிறப்புக் கண்டாய்
இறப்பிலும் சிறப்புக்கொண்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமநாதன் இசை நுண்கலைக் கல்லூரியில்
இரு மூன்றாண்டுகளாய் இசைப் பேராசானானபின்
திறனறியா மதிகெட்ட தலைப்பீடம்
புறந்தள்ளி அகற்றியதே உந்தன் சேவை
காக்காய் பிடித்துக் கையூட்டுத் தொண்டு செய்தால்
சோக்காய் அப்பதவி சுகமாய்க் கிடைத்திருக்கும்
அந்தக்கலை உந்தனுக்கு வராதகலை யன்றோ
நொந்துமிக நலிந்து நோயுற்றுப் போனதுவே

வதிரன் புலோ விநாயகரின் புகழ்பாடி இறுவெட்டு
ஒலிநாடவெளியிட்டு ஊரெல்லாம் ஒலிக்க வைத்தாய்
உலகெல்லாம் ஒலிக்குதவன் இன் கருணை நின்குரலில்
அலகிலா இச்சேவை யார்செய்வார் நீயல்லால்

பட்டுத்திப் பளபளக்கும் பணிகள் பூண்டு
கட்டுச் சுருள் கூந்தலிலே கள்ளவிழும் பூச்சாடி
வட்டநிலா வதனத்துக் குமுதவாய் செவ்விதழ்
மொட்டவிழந்து மெல விரிந்து முத்துப்பல் முறுவலித்து
வளைக்கரம் காந்தள்மெல்விரல் தட்டித்தாள ஒலியெழுப்ப
அழைத்து (உ)வந்த அன்பருக்குக் கரம்கூப்பி சிரம்தாழ்த்தி
வந்தித்து

சுதிகூட்டிச் சுரமெழுப்பிக் கணபதிக்கு முதற்காப்பு
சதிஸ்வரம் தில்லானா நிரவலொடு சங்கதிகள்
தனைவளர்த்த மேலான தமிழுக்கும் நாட்டிற்கும்
தனித்தனியே பாட்டிசைத்துத் தொடருமந்தக் கச்சேரி
இனிக்க இனிக்க அந்த இசை கேட்டோர் தமைமறப்பர்
தலையசைத்துப் பாட்டோ! இது பழரசமோ! தெள்ளமுதோ
கலையமுதக் கனிச்சாறோ! கன்னற்களஞ்சியமோ!
குரலோ! இது குழலோ! யாழோ! கானமழையோ!
பரலோக தேவதையோ! பாட்டிசைக்கும் இப்பாவை – என
இசைஞானமில்லாரும் இசைந்துருக
இசைமாரி மேடையிலே பொழிந்தின் புற்றாய்
பத்திரசம் சொட்டும் பல பாடல்கள் கீதங்கள்
முத்திக்கு வழிசொல்லும் மூவர்தமிழ் வாசகமும்
தித்திக்கத் தித்திக்க அள்ளி வழங்கித் தேனாய்
மாந்தியுண்ட மாந்தரெல்லாம் மதுகரமாய்
சாந்திபெற்றுச் சற்றே அமைதிகண்டார் அவைதனிலே

கானக்குயிலே! இசைவானப்புள்ளே!
வானம்பாடியென யெழுந்தமென் குரலுக்கோ
சாலையோரத்தில் சடுதியாய் முடிவேனோ?
காலைவேளை கணபதிவீதியிலே வேட்டுவைத்தான் வீணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னுடல் சாய்ந்தது மென்குரலோய்ந்தது
மனிதம் செத்து மரணவொலி நாடெங்கும்
புனிதமான மாந்தருக்குப் புகலிடமிங்கேது

கன்று காணப் பசுவெனவே கதறுதம்மா இசையுலகு
என்று நீ வருவாயென ஏங்கித் தவிக்குதுள்ளம்
நொடிக்கு நொடி வெடிக்குமிந்த வெடிகுண்டுக் கஞ்சி
துடிக்கிறது மனித இனம் தமிழீழ நாட்டினிலே
விதியா? அன்றி வீணர்களின் சதியா?
மதிகெட்ட மடையர்களின் கொலைவெறியா?
கதியற்றுக் கலங்குகின்ற தமிழர் நமக்கொரு
பதியாள்வான் வாரானோ சதிதன்னை மாற்றானோ?
நெஞ்சையுருக்குமிந்த நெடியதுயர் தீருமையா
அஞ்சிநாம் வாழ்ந்த அவலதுன்பம் போதுமையா
துஞ்சிடா தோடி வநது துயர்களைய வேணுமையா
வஞ்சி சாரதா மரணம் போலினியும் மேவாது
அஞ்சலென வந்து அபயம் கொடுத்தாளுமையா
அடி தொழுதோம் பிடித்தழுதோம் பிஞ்ஞுகா
முடிவுசெய் மூர்க்கர் முட்டாள் வினைகளுக்கு
நம்பிக்கையோடு நாம் தொழுதெந்நாளும்
தும்பிக்கையான் கரத்தில் ஒப்படைத்தோம் எம்வாழ்வை

எல்லையிலாக் கொடுமைக்கு எல்லை தந்து
தொல்லையகற்றித் தொடரும் துயர்போக்கி
அல்லல் தீர்த்தெமை ஆளுமையா ஆதரவாய்
தில்லையிற் கூத்தனே தீருமையா தீவினையை
சொன்னமுறைப்பாடு திருச்செவிற் கொள்ளுமையா
மன்னநின்னாட்சி மாநிலத்திற் தாருமையா
நல்லதீர்ப்பொன்றை நம் தமிழருக்கீயுமையா
வல்ல இறைவா வந்தெமைக் காருமையா
சரணம் சரணம் நின் சரணாம் புயபாதம்
சரணம் சரணம் சங்கரா நின் பொற்கழலே.

இராக தாள பாவ இலய பல்லவி வித்தகி சாரதாவின் ஆத்மா
சாம கானப் பிரிய லோவன் சர்வேசன் அடிக்கீழ் அமைதி பெறுக.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வருந்துபவர்
**செல்வி. இ. சுப்பிரமணியம்**
பண்ணாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குயிலாகிப் பாடுகின்ற சாரதாவே உந்தன் குரலுக்கு ஈடாக யாருளரோ!

வதிரகானமதை காற்றோடு கலந்தொலிக்க
உதிரம் சொரிந்திங்கு உழையாமல் உழைத்திட்டு
சதிரம் நடுங்கிடவே அதிர்வினைத் தந்துதிர்ந்த
முதிர் ஞான இசையரசே சாரதாவே முழங்காயே!

குயிலாகிப் பாடுகின்ற சாரதாவே உந்தன்
குரலுக்கு ஈடாக யாருளரோ
மயிலாகி மாணவர்கள் ஆடிடவே மன்றில்
உரமான குரலிசைக்க யாருளரோ
(மன்றில் உரமான குரலிசைக்க யாருளரோ)

வரமாகி மூளாயில் வந்துதித்தாய் வந்து
வதிரன் புலோவினையே தொழுதுநின்றாய்
சுரமான கலையுலகின் சாரதமே ஞானத்
துதிபாடித் துதிக்வினி யாருளரே!
(ஞானத்துதி பாடித்துக் கலினி யாருளரோ)

பெற்றோற்கு பெருமைதந்த சாரதமே உற்ற
சோதரற்கு ஆதரவாய் அன்புசெய்தாய்
நற்றுணை நாயகனைப் போற்றிநின்றாய் நாளும்
ஆதரவு பிள்ளைகட்கு யாருளரோ!
(நாளும் ஆதரவு பிள்ளைகட்கு யாருளரோ)

நுண்கலைப் பீடமெலாம் நுளைந்துவந்தாய் நூலில்
இல்லாத நுணுக்கமெலாம் பயின்றுவந்தாய்
பண்ணிசைப் பொக்கிசமே சாரதமே பாரில்
எல்லோரும் போற்றவினி யாருளரோ!
(பாரில் எல்லோரும் போற்றவினி யாருளரோ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலி ஒளி யானவளே சாரதமே எங்கள்
ஊருக்கு உயர்வுதந்து நீயிருந்தாய்
வலிதந்து நலிந்துருகிப் போனதென்ன தாயே
பாருக்குள் உனக்கீடாய் யாருளரோ!
(தாயே பாருக்குள் உனக்கீடாய் யாருளரோ)

குயிலாகிப் பாடுகின்ற சாரதமே உந்தன்
குரலுக்கு ஈடாக யாருளரோ
மயிலாகி மாணவர்கள் ஆடிடவே மன்றில்
உரமான குரலிசைக்க யாருளரோ!
(மன்றில் உரமான குரலிசைக்க யாருளரோ)

ஆசுகவி
**ழீளாயூர் செ. சிவசுப்பிரமணியம்**

**கல்விகரையில கற்பவர் நாள்சில**
**மெல்ல நினைக்கிற் பிணிபல - தெள்ளிதின்**
**ஆராய்ந்தமைவுடைய கற்பவே நீரொழியப்**
**பாலுண் குருகின் தெரிந்து**

**- நாலடியார்**

**சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க**
**சொல்லிற் பயனிலாச் சொல்**

**- குறள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைப் பேரொளி

அமரர் திருமதி சாரதா பரஞ்சோதி அவர்களுக்கு, எமது மனம் நெகிழ்ந்த அஞ்சலிகள். மனிதருள் மாணிக்கம் மாண்பு நிறைந்த இசைவாணி திருமதி சாரதா பரஞ்சோதி அவர்கள் இன்று நேற்றல்ல இருபது ஆண்டுகளிற்கு மேலாக எனது உள்ளத்தில் இசைத் தெய்வமாக வாழ்கிறார்.

அன்னாரின் மறைவு என்னை வாழ்நாள் முழுவதும் நீங்காத துயரில் ஆழ்த்திச் சென்றுள்ளது. அவர் ஒரு பெருமிதமில்லாத வெள்ளை உள்ளம் படைத்தவர். எங்கு வந்து பாடச்சொன்னாலும் தன்னை ஒரு தரம்மிக்கவராக நினைக்காது எம்மில் ஒருவராக நின்று தனது இசைப்பணியை ஆற்றிய பெரியார். அவர் இசைத்துறைக்கு ஆற்றிய சேவைகள் கணக்கில் அடங்காதன. வல்லினமும் மெல்லினமும் அவருடன் கூடப்பிறந்தன போலும் இந்த அளவிற்கு ஓர் சுகமான பாட்டை நாம் இனி எங்கு கேட்போம். 2007ம் ஆண்டு தியாகராஜா உற்சவத்தின் போது அவர் பாடிய சங்ஹராபரணம், மோகனம் இரண்டும் கலைஞர்களின் மனதை விட்டு நீங்காத ஒன்று அன்னாரின் மறைவு எமது தேசத்திற்கே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. அவரை நாமிழந்தது எமது துரதிஷ்டம்தான். மண்ணுலகில் உனது இசை வெள்ளம் போதும் விண்ணுலகில் உனது இசையருவி எனது காலடியில் ஆறாகப்பாயட்டுமென்று கலைவாணி தன்னடி சேர்த்துக் கொண்டாள். அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் அவர் பிரிவால் துயருற்று வாடும் அவருடைய கணவனார், குழந்தைகள், சகோதர, சகோதரிகள் அவரது தாயார் மற்றும் சுற்றத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து எல்லாம் வல்ல வதிரன்புலோ ஸ்ரீ சித்திவிநாயகரை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**இரா. சிவகுமார்**
நாதஸ்வரம் ஆஸ்தான வித்துவான்
சித்தி விநாயகர்
முத்துக்குமாரசுவாமி ஆலயம்
மூளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் அகத்திலிருந்து...

சங்கீதக் குயிலே சாரதா ரீச்சரே – உன்
வெள்ளை மனமும் கள்ளமில்லாத் தாயுள்ளமும் தன்வயிற்றுப்
பிள்ளையென எமையணைத்த பேரன்பும் - உன்னைப்
பார்த்தவுடன் பசி மறக்கும் பவளவாய்ச் சிரிப்பழகும்
பாசம் மிளிரும் உந்தன் பக்குவமும் - சங்கீதத்தை உச்சரித்து
மகிழும் உந்தன் அகத்தின் பேரழகும்
அன்பு முகமும் என்றும் அழியாத சித்திரமாய்
எம்மிதயக் கோயிலிலே என்றென்றும் வாழுமம்மா – உன்னை
எண்ணிடும் போதிலெல்லாம் கண்ணில் நீராகுதம்மா
சங்கீதம் என்ற இசைக்கு குரல் கொடுப்பாய் - ஆனால்
நாம் படிக்கும் இராகத்தில் குறை இருந்தால் கொதித்தெழுவாய்
- என்றும்
நீ மீட்டும் இசைகள் உன்னைத் தேடுதம்மா - இவ் இசையை
ரசித்துக் கற்கும் மாணவரின் உள்ளமோ பரிதவித்து ஏங்குதம்மா
சிந்தனைக்குத் தீனிபோடும் நீ சொல்லும் தத்துவங்கள்

எங்கேயம்மா
தத்துவங்கள் சொல்வார் இங்கு யாரும் இல்லையம்மா – உன்
இறுதி இலட்சியத்தால் மீண்டெழுந்த நாட்டிய நாடகமோ
உந்தன் குரல்வளை அறுந்த செய்தி கேட்டு
மாகாணம் செல்லாமல் நடுத்தெருவில் நின்றதம்மா - இன்றோ
தேற்றுவாரின்றி உன் உறவுகள் துடிதுடித்து நிற்க
சிவப்பிரகாசத்தின் உறவுகள் பரிதவித்து நிற்க – நீயோ
வெற்று நாடேறி விரைந்தனையோ எம்தாயே
சிவப்பிரகாசத்தின் சபை நடுவே நீயிருந்து சங்கீதம் இசைத்து
வல்லாண்மை செய்த அப்பொன்னாள் இனி வாராதே!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் துயரினால் பரிதவிக்கும்
**மாணவர்கள்**
யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

இசைத்துறையில் கால்பதித்து இந்து இளைஞர் மன்றத்திற்கு இன்பம் ஊட்டி இன்று எம்மையெல்லாம் பெரும் கவலைக்குள் ஆழ்த்தி விட்டுச் சென்ற சாரதா பரஞ்சோதி அவர்களின் 49ஆம் நாள் நினைவு நாளிலே அவருக்கும் எமது இந்து இளைஞர் மன்றத்திற்கும் இடையிலான நெடுங்கிய தொடர்பை மீட்டிப் பார்க்கிறோம்.

"செவிக்கு உணவில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப்படும்" என்றான் வள்ளுவன்.

இதனை நாம் எமது வாழ்நாளில் பார்த்திருக்கிறோம். எமது மன்றத்தின் ஒரு நிகழ்ச்சி என்றால் அங்கே கட்டாயம் சாரதா பரஞ்சோதி அவர்களின் இசைக்கச்சேரி இருக்கும். அதனை இரசனையாக கொள்வதற்கு இன்னொரு குழு கூடி இருக்கும். ஆனால் இன்று நாம் கூடுவதைப் போல கண்ணீரும் கம்பலையுமான கூட்டமல்ல அது அங்கே இசையால் மயங்கி இன்பக் கிளர்ச்சியில் ஆனந்த கண்ணீர் விடும் ஆனந்தசங்கமம் அது. வள்ளுவன் குறளை மெய்ப்பித்த அந்த நினைவினை மீட்ட வேண்டுமென்றால் இன்றும் அதற்கு ஆதாரம் எமது பிள்ளையார் ஆலயத்தில் இருக்கின்ற இசைத்தட்டு என்று தான் எண்ணுகிறேன்.

இதில் என் நண்பன் ஒருவன் அடிக்கடி சொல்லும் கருத்தையும் சொல்லுகிறேன்.

"நீவளர வேண்டுமானால் உன் முன் வளமாக நல்ல சிந்தனைகளோடு வாழ்ந்த மனிதர்களின் நல்லதும். உயர்ந்ததுமான சிந்தனைகளுடன் வாழத் தவறாதே"

இதனையே பேராசிரியர் கைலாசபதி அவர்களும் "ஒருவன் வாழ்கின்ற போதே வாழ்த்தப்பட வேண்டும்" என்று கூறுகின்றார். ஆனால் நாம் வாழ்கின்ற போது உள்ளத்தால் சாரதா பரஞ்சோதியை வாழ்த்தி இருக்கிறோம். அவரது நல்ல பண்புகளை உள்ளெடுத்திருக்கிறோம். அதனால் நாம் கவலைக் குள்ளும் பெருமை அடைகிறோம். அவர் எம்முன் இல்லையே என்ற கவலை எம்மை வாட்டினாலும் "குடம்பை தனித்தொழிய புள் பறந்தற்றே உடம்போடு உயிர் இடை நட்பு" என்ற உண்மையில் தெளிவோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**இந்து இளைஞர் மன்றம்**
மூளாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குயிலிசைக் குருவினைத் தேடிக் குமுறும் இசை பயில் மாணவர்...

குவலயம் போற்றும் குயிலிசைக் குருவே
தினம் சங்கீதம் இதுவென உணர்த்தி
மனம் கோணா நிலை நின்று
வளமுறு கீதங்கள் கீர்த்தனைகள்
தளராது கற்பித்து தயவுடனே – நாம்
உணராத நுணக்கங்கள் நுவலவைத்தீர்
அன்புடனே அறிவுடனே – நற்
பழக்கம் பல சொல்லிப்
பாரினில் உயர வைத்தீர்
யாரினி நாம் சிறக்கப் பாடுவார்
வேரின்றிச் சாய்ந்திட்ட சங்கீத விருட்சமொன்று
பாறிட்டு வீழ்ந்ததுவோ? பார்முழுதும் ஓலமிட
நாதியின்றி நாதமது சுருதியின்றித் துடிக்கிறது
துடிக்கின்ற சுருதிக்கு துணை சேர வாரீரோ
அன்பின் ஆதாரமே! அறிவின் பொக்கிசமே – தன்
இசை பயின்ற பறவைகளின் சிறகொடித்துத்
தவிக்கவிட்ட இறைவா நீ விடை கூறு

உங்கள் இசையால் வசமாகி
உங்கள் பேச்சில் லயமாகி
உங்கள் பாட்டில் அனுபல்லவியாகி
எங்கள் வாழ்வில் வசந்தம் வரும் வேளையிலே
எங்கு சென்றீர் எம்மை விட்டு.

**இசை பயின்ற மாணவர்கள்**
யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை வாத்தியக்குழுவினருடன் (Band)



பாடசாலை இசைக்குழு மாணவருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடிப்பறந்த குயில்

ஈழத்து இசைவானில் நீளவலம் வந்து பாடிப்
பறந்த குயில் கோரப் பருந்துகளால்
மறைந்து போனதையா... யார் செய்த கோலம்
விதியா சதியா ஏன் இந்தக் கதி நினைக்க
முடியுதில்லை, நினைக்காமல் இருக்கவும்
முடிவதில்லை, மனித முடிவுகள் இப்படித் தொடரின்
எப்படி இந்த மண்ணில் வாழ்வது
மண்ணில் நல்ல வண்ணம் வாழ அதற்கான
நல் கதிகளை எண்ணத் தானும் முடியாத
துயர முடிவினிலின்று நம்மைச் சூழ்ந்துள்ளது
துணையை இழந்த தலைவன், அன்னையைப்
பிரிந்த குழந்தைகள், உறவு இழந்த சுற்றம்
இசை இல்லா கீதம் என எங்கும் இணைவுகள்
இழந்த நிலை சாரத்தின் சடுதியான மறைவால்!!
சப்த சுரத்தில் சாரமான பாணியில் சங்கீத
சாகரத்தில் சர்க்கரையைக் கரைத்துக் கொண்டிருந்த
சாரதா சாவாள் என எப்போதாவது எள்ளளவு
தன்னும் நினைத்தோமோ?
நெஞ்சு பொறுக்குதில்லை இந்த நிலைகெட்ட
மாந்தரை நினைந்து விட்டால்.....
எங்கோ எப்போதோ கேட்ட வரிகள் நெஞ்சை
நெருடிச் செல்கின்றன.
இந்த நெருக்கடிக்களுக்கு எல்லாம் எப்போது சவுக்கடிகள்
சவுக்கியம் சந்தோஷம் போன்ற பதங்களுக்கு இப்போது
பொருள் விளங்குவதில்லை மழை ஓசையில் மகிழும்
சாகரப்பட்சி போல எங்கள் சாரதாபட்சியும்
சங்கீத சப்தத்தில் தானும் மகிழ்ந்து பிறரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்வித்துக் கொண்டிருந்த இசைமங்கை இப்போது இசையும் இல்லை அவளின் இணைவும் இல்லை ஏன்? ஏன் என்றுகேட்காமல் இருக்க முடியவில்லை, கேள்விக்கு விடையும் தெரிவதில்லை இல்லை என்ற சொல் மனதை எப்போது இரணகளமாக்கிக் கொண்டிருக்கிறது
காலம் தன் கணக்கில் கழிந்து கொண்டிருக்கிறது. ஆம் இவை எல்லாம் காலத்தின் கோலம். காயம் மறைந்தாலும் காலத்தின் வடுக்கள் மறைவது கடினம் அதுபோல் சாரதா என்ற சங்கீத சரணத்தை சிந்தை மறப்பது சீரணிக்க முடியுதில்லை

என்றாலும் முடிவுகள் அவன் கையில் விடிவுரைகளுக்காக
ஏங்கும் மன உணர்வுகள் எம்கையில்
பிரிவு உணர்வால் இன்று கலங்கும்
அவர் குடும்பத்தினருக்கு என்றும் எம்
ஆதரவு மொழிகள் பொழியும் மொழிகள்
இல்லா மன நிம்மதியை இனி அந்த நிர்மலக் கடவுள்
அவர் குடும்பத்தாருக்கு வழங்க வேண்டும் என்று
விநாயகப்பெருமானை வேண்டி அன்னாரின் ஆத்ம
சாந்திக்காக பிராத்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அஞ்சலிக்கும் அன்பு நெஞ்சம்
**தி. சிவதட்சணாமூர்த்தி**
உதவிப்பணிப்பாளர்
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தான
பரிபாலன சபை
Moolai Vathiranpulo Sithivinayagar Thevasthana
Paripalana Sabai

ஆரம்பம்: 02-12-1920 / Estd: 02-11-1981 — தேவஸ்தான பதிவிலக்கம்: HA/5/JA/642 — திருப்பணிச் பதிவிலக்கம்: HA/4/J/170

Your Referance No:
Our Referance No:

Moolai,
Chulipuram.
SRI LANKA

மூளாய்,
சுழிபுரம்
இலங்கை

# இன்னிசை மீட்டிய "வதிர கான இசைஞானி"
# சாரதா பரஞ்சோதி

பரந்த முகம் திருநீற்றுத்திலகம் தவழ வான் முகத்தில் வரவேற்கும் புன்முறுவல் திகழ, சிறிய கண்களுடான சிரிப்பு தவள, சுகம் கேட்டு நம்மனத்துள் சுடரெளியாய் விழங்க வைத்து இசை மீட்டிய இசை அரசி சடுதியாய் மறைந்தாரே.

சங்கீதத்தை பத்தி மார்க்கமாய் நடத்தினால் தான் நல்லது அதற்கு அணிகலமாய் விளங்கியவர் சாரதா பரஞ்சோதி. இவர் தமிழ் மக்களின் கலாசார பண்பாட்டு, சமய வளர்ச்சிக்கும் மிகவும் உறுதுணையாய் வாழ்ந்து காட்டிய ஓர் "அகல்விளக்கு".

இத்தகைய பண்புகளைக் கொண்ட சாரதா சிறுவயது முதல் மூளாய் "வதிரன்புலோ என்னும் திவ்விய ஷேத்திரத்தில்" அருள் நெறி தழைக்க தன் இசை ஞானத்தினால் மகிழ்ச்சி கடலில் ஆழ்த்தியவர். சிறந்த பக்தி இவ்வுலகத்தில் வெள்ளிதோறும் பஜனையில் மாணவ செல்வங்களை தன் இசை ஞானத்தினால் வழிநடத்திச் சென்றவர்.

இவ்வாலயத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் மகோற் சவத்தில் இன்னிசை நிகழ்த்திநடாத்திப் பெரிதும் சிறப்படையச் செய்தவர். இவற்றிக்கெல்லாம் சிகரம் வைத்தால் போல் இவ்வாலயத்தில் அருளாட்சி செய்து கொண்டிருக்கும் "சித்தி விநாயகரின்" கர்ண பரம்பரை இதிகாச சாத்திரத்தை இசை வடிவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வதிரகானம்" என்னும் ஒலிப்பேழையை இவ்வாலயத்தில் 30-06-2004 அரங்கேற்றியவர். அதன் மூலம் இவ்வாலயங்கள் காப்பாற்றப்படும் வரை, இவரின் நாமமும் காப்பாற்றப்படும்.

அன்பும், அருளும். புகழும் பெற்ற சாரதா பரம்சோதி என்னும் உத்தம செல்விக்கு, இவ்வாலயத்தின் சார்பில் இவரின் சேவையை கௌரவித்து. "வதிரகான இசைஞானி" என்ற கௌரவத்தை அளிக்கின்றோம். மறைந்தும் மறையாத இன்னிசை மீட்டிய இசை அரசி சாரதாவின் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்.

"சித்தி விநாயகர் கருணை மகத்தானது"

**க. செல்வராசா**
தலைவர்
சித்திவிநாயகர் தேவஸ்தானம்
மூளாய்

**குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டமுகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவுநிலைமையாற்
கல்வியழகே அழகு.**

**- நாலடியார்.**

**தன்னைத் தான் காதலனரின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவணைப்பால்**

- குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சாயி துணை
பாசமே சிகரம் கல்வியே வேள்வை

# றெமிங்ரன் கல்வி வளர்சோலை

35 ஆவது ஆண்டை நோக்கிச் செல்லும் நிறுவனம்

மூளாய். ஆரம்பம் :- 1974 கிளை சுளிபுரம்.

## கலைஞானப் பெண் இவர்

கலைத்தெரு எனக்கூறும் டச்சுவீதியின் முகப்பில் முத்துக்கள் போல மிளிர்வது இவர் குடும்பம். ஞானம் என்பது "நாவினால் நவிலற்பாலதன்று" ஆண்டவன் அனுப்பி வைக்கின்றான். அவ்வாறான அருள்ஞானக்கொடைதான் "சாரதா" ஆசிரியை ஆவார். புன்முறவல் குனிந்த தலை, கலைஞான பரந்த நெற்றி, மக்கள் மனங்களைப் பற்றிப்பிடித்த சுருண்டகேசம் தன்நலமும், தற்பெருமையும் அற்ற பொன்மனச் செம்மல் இவரே. தமக்கை யசோதர் வயலின் மேதை, இவரோ சகலாகலாவல்லி தங்கையும், தமையனும், கலை விற்பன்னர்கள். பெற்றோர்களும் கல்விச்சமூகம். சாரணியமே இவர்கள் பாசறை. இவர் எமது கல்வி நிறுவனத்தில் படிக்கும் போது கணித பாடத்தில் மகாநிபுணை எமது கல்வி நிறுவனத்தின் கீதத்துக்கு இசை அமைத்தவர் இவரே. மகனையும் தொடராக அழைத்து வந்து கற்க அனுமதியும் பெற்றார். இவர் கணவன் என் கல்வித்தோழன் தனிப்பட்ட முறையிலும் இவர் கலைச்சேவை செய்தவர் ஆவார். நாட்டிய நிகழ்வுகளில் இவர்இசைகளைகட்டும் ஆலயக்சேரிகளில் மக்கள் மனதை இசையால் வென்றவர் இவர். நாம் கொடுத்து வைக்கவில்லை கலைப்பயனை தொடர்ந்து பெறுவதற்கு பிரதேசத்தில் எங்கெல்லாம் யாரைக் கண்டாலும் சிரித்து பண்பாகத் தலைசாய்த்து செல்வார் நல்ல இதயம் சித்தி விநாயகர் கொடுத்ததல்வா..... மற்றவர் திறமைகளைக்கூட நன்கு மதிப்பிட தெரிந்த கலையரசு இவரை நாம் மறந்தாலும் எம் 'நா' மறக்காது என்றோ ஒருநாள் ஆண்டவன் அழைப்பு எல்லார்க்கும் உண்டு சொர்க்கவாசல் கதவுகளால் தானே இவர் உள்ளே நுழைந்தார் என ஆறுதல் பெறுவோம் அவனுக்கும்கூட ஆவல் போல் நடேசன் இசைப்பிரியன்தானே....

கலைத்தாயின் ஆத்மா சாந்தி பெறட்டும்

**கனகசபாபதி மனோகர்** J.P
றெமிங்ரன் கல்வி வளர்சோலை
இயக்குநரும், ஆசிரியரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துப் பண்பாட்டில் மகளிர்

இந்துப் பண்பாட்டில் மகளிர் மிக உயர்ந்த இடத்தைப் பெறுகிறார்கள். குடும்ப வாழ்வின் உயர்விற்கும் சிறப்பிற்கும் பெண்ணே மூலாதாரமாகத் திகழ்கிறாள். சிவனுடைய மூர்த்தங்களில் பல வடிவங்கள் சத்தியுடன் இணைந்த வடிவங்களாகவே காணப்படுகின்றன. சிவன் அறிவின் ஆதாரம் என்றால் சக்தி அதனை இயக்கும் தத்துவமாகக் காணப்படு கின்றாள். சக்தி இல்லாமல் சிவ தத்துவம் எதனையும் இயக்க முடியாது என்றே சங்கரர் சௌந்தர்ய லஹரியில் குறிப்பிடுகின்றார். பெண்கள் எல்லோரையும் அன்னை பராசக்தியின் அருள் வடிவமாகவே இராமகிருஷ்ண பரமஹம் சர் சித்திரிக்கிறார்.

இந்து சமூகத்திலே குடும்ப அமைப்பு மிக முக்கியமான தாகக் காணப்படுகிறது. குடும்பம் கட்டுக்கோப்பாக இருப்பதற்கும் குடும்பத்தின் நிலை பேற்றிற்கும் இல்லத்தை ஆட்சி புரியும் இல்லத் தலைவியே காரணமாகின்றாள். "இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றுமில்லை" என்பது நம்மிடம் உள்ள முதுமொழி ஆகும்.

நமது பாரம்பரியத்தில் பெண்கள் கல்விக் கூடங்களில் பெற்றுக்கொள்ளும் அறிவிலும் பார்க்க தமது குடும்பச் சூழலிலே கற்றுக்கொள்ளும் அனுபவ அறிவே அவர்களுடைய நடைமுறை வாழ்க்கைக்கு பெரிதும் உதவுவதைக் காணலாம். "கற்கிறேன் என்ற உணர்வில்லாமல் கற்கும் முறையில் கல்வி இதுவாகும். "தாயைப் போல பிள்ளை நூலைப்போல சேலை" என்பதும் "நிலத்தைப் பார்த்துப் பயிரிடு, தாயைப் பார்த்து பெண்ணெடு" என்பதும் நம்மிடம் நிலவி வரும் பழமொழிகள் ஆகும்.

ஒழுக்கத்தை உயிரினும் மேலாகப் பேணுதல் அனைவருடனும் இனிய வார்த்தைகளைப் பேசுதல், விருந்தினர்களை முகமலர்ச்சியுடன் உபசரித்தல், பூமாதேவியைப் போல பொறமைக்கு இலக்கணமாக இருத்தல், சகிப்புத்தன்மை, மற்றவர்களை மதித்து நடத்தல் ஆகிய மனிதப் பண்புகளை பெணகள் சிறுமிகளாக இருக்கும் பொழுது குடும்ப அங்கத்தவர் களிடையே சிறப்பாகத் தாயிடமிருந்தே பெற்றுக் கொள்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுமியாக இருக்கின்ற பெண்பிள்ளை மங்கைப் பருவம் அடைகின்ற பொழுது அந்த இல்லத்திலே ஒளி வீச ஆரம்பிக்கிறது. அறுசுவை உணவைத் தயாரிப்பது, உற்ற சுற்றத்தைப் பேணி நடப்பது, ஆகிய செய்றபாடுகளை எல்லாம் தனது தாயிடமிருந்து பிள்ளை முறையாகக் கற்றுக் கொள்கிறாள்.

இந்து சமயம் கூறும் ஆச்சிரம தர்மங்களில் அச்சாலை போன்று அமைந்திருப்பது இல்லறமே ஆகும். மங்கைப் பருவம் அடைந்த பெண் தனக்கு ஒரு வாழ்க்கைத் துணையைத் தேடிக் கொள்கிறாள். "தாரமும் குருவும் தலையில் எழுத்து" என்ற முதுமொழிக்கேற்ப நல்லதொரு வாழ்க்கைத்துணை கிடைப் பதற்கு இறைவனின் திருவருளும் துணை செய்தல் வேண்டும். ஒரு பெண்ணுக்கு வாழ்க்கையில் கிடைக்கும் மிக உயர்ந்த பேறு நல்லதொரு கணவன் வாழ்க்கைத் துணையாக வந்து வாய்ப்பதே ஆகும்.

"உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்
உன் அடியார் தாள் பணிவோம் ஆங்கு அவர்க்கே
பாங்கு ஆவோம்"
"அன்னவரே எம் கணவர் ஆவார்
அவர் உகந்து சொன்ன பரிசே தொழும் பணி செய்வோம்"
எனத் திருவெம்பாவைப் பாடலும் இதனைக் குறிப்பிடுகின்றது.

இந்துப் பண்பாட்டில் இல்லறம் நல்லறமாகவே கூறப்படுகின்றது. அன்புடன் வாழ்வதே இல்வாழ்க்கையின் பண்பு, அறத்தைப்போற்றி வாழ்வதே இல்வாழ்க்கையின் பயன். அன்போடும் அறத்தோடும் வாழ்வது தான் இல்வாழ்க்கையின் பண்பும் பயனும் என்கிறார் திருவள்ளுவர்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது.

என்றே தமிழ் மறையாகிய திருக்குறளும் கூறுகிறது. இல்லறத்தில் இணைகின்ற தம்பதிகளிடையே கருத்தொருமித்த தன்மை காணப்படுதல் வேண்டும். "காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்" இல்லறத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து குடும்பத் தலைவியாகின்ற பெண்ணைத் தர்மபத்தினி என்றே இந்து சமய நூல்கள் குறிப்பிடுகின்றன. இப்படித்தான் செய்ய வேண்டிய பஞ்ச மகா யக்கங்களாகிய தேவ யக்ஞும், ரிஹியக்ஞும், பிதுர் யக்ஞும், சுத்தி யக்ஞும், பூத யக்ஞும் ஆகிய அனைத்துக்கும் துணையாக இருப்பவள் ஆகையால் குடும்த் தலைவி தர்மபத்தினி என்று அழைக்கப்படுகிறாள்.

ஒரு பெண் ஆனவள் தாயாகின்ற பொழுது தான் அவளுடைய வாழ்வு முழுமை அடைகிறது. கருணையே வடிவமாக இருப்பவள் தாய். வேதங்கள் தாய்த் தெய்வமாகிய அம்பிகையைத் "தாயைப் பிரகாஜினி" என்று குறிப்பிடுகின்றது. தாயினுடைய பாத்திரத்தை வேறு எவராலும் நிரப்ப முடியாது. தனது பிளளைகளின் நலனுக்காகத் தாயானவள் தன் வாழ்க்கையே பரித்தியாகம் செய்கிறாள். கருவுறும் தாயானவள் கருவைப் பத்து மாதம் தமது உடம்பின் ஒரு பகுதியாக வைத்திருந்து அதன் பின்பே பெற்றெடுக்கிறாள். இந்தப் பெற்றெடுப்பை பேறு (குழந்தைப் பேறு) என்பர். உண்மையில் பிள்ளையைப் பெறுவதென்பது தாயும் பிள்ளையும் தத்தம் உயிர்நிலைகளைப் பெற்றுக்கொள்வதாகும். இதனாலேயே இன்றும் யாழ்ப்பாணக் கிராமங்களில் ஒரு பெண்ணுக்குப் பிரசவ வேதனை ஏற்படுகின்ற போது இரண்டுயிரும் தெரிக்க வேண்டும் என்று பிரார்த்திப்பர். தாய் வழியால் ஏற்படும் உறவு என்றும் இறுக்கமானதாக இருக்கும் என்பதே "வேராடி விளாத்தி முளைத்தாலும் தாய் வழி தப்பாது" என்ற பழமொழி விளக்குகிறது.

தான் பெற்ற பிள்ளைக்குத் தாயானவள் பாலை நினைந்து ஊட்டுவாள். தாய் ஊட்டும் பால் அவள் தன்னை உருக்கிப் பிள்ளைக்குக் கொடுப்பது. பாலூட்டி, சீராட்டித் தாலாட்டி தாய் தன் பிள்ளையைக் கண்ணும் கருத்துமாக வளர்த்தெடுக் கின்றாள். தெய்வ வாசகமாகிய திருவாசகத்தை தந்த மணிவாசகனார் இறைவன் தனக்கு அருளிய திருவருளின் சிறப்பினைக் கூறும் பொழுது "பால் நினைந்தூட்டும் தாயினும் சால" எனத் தாய்மையோடு ஒப்பிட்டு விளக்குகின்றார். பெண் தாயாகின்ற போது தெய்வத்தன்மையைப் பெற்று விடுகிறாள். தாயின் பிரசன்னம் பகல் நேரத்துச் சூரியன் போன்றது. அதனை யாரும் விதந்து கூறுவதில்லை. பகல் என்றால் வெளிச்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் என்பது அனைவருக்கும் தெரியும். இவ்வாறு தாயின் அருட்பார்வையில் பிள்ளைகளின் வாழ்வு ஒளி வீசும்.

பாட்டியாகி முதுமையடைந்து வாழ்கின்ற பெண்கள் தங்கள் குடும்பத்தில் சிறந்த மதிப்புரைஞராக ஆலோசகராகத் திகழ்கின்றார்கள். தனது பட்டறிவின் துணை கொண்டு குடும்பத்தில் இருக்கும் இளம் உறுப்பினர்கள் அனைவரையும் சரியான பாதையில் வழி நடாத்துகின்றார்கள்.

இவ்வாறு ஒரு பெண் ஆனவள் இந்துப்பண்பாட்டில் சிறுமியாக, மங்கையாக, தாயாக, மூதாட்டியாக பல்வேறு பரிமாணங்களில் வளர்ச்சி பெறுகின்றாள். எல்லா நிலைகளிலும் தனது கடமைகளை ஒழுங்காகச் செயகின்ற பொழுது பெண் ஆனவள் தெய்வநிலைக்கு உயர்ந்து விடுகிறாள். மனையறம் காத்த மங்கைகளாக, இல்லற தீபங்களாக ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றாள். எமது மகளிரின் வாழ்வும் சிந்தனையும் சரியாக அமைந்தால் குடும்பங்கள் சீராக இயங்கும் குடும்பங்கள் சீராக இயங்கினால் வீடும் நாடும் சிறப்பாக இயங்கும். மகளிர் சக்தி மகத்தான சக்தி என்பதை உலகம் உணர்ந்து கொள்ளும்.

**ச. சிவத்தமிழ் வித்தகர்**
**சிவ. மகாலிங்கம்**
இளைப்பாறிய உதவிப் பணிப்பாளர்
இந்துசமய காலாசார அலுவல்கள் திணைக்களம்
ஆசிரியர், யாழ்ப்பாணக்கல்லூரி
வட்டுக்கோட்டை.

**மனைத்தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத்துணை.**

- குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடும் பணியே பணியாகக் கொண்டவர்

அமரர் திருமதி. சாரதா பரஞ்சோதி அவர்கள், அருள்மிகு ஜெகஜோதி அம்பாள் மீது அளவற்ற பக்தி பூண்டவர். 2000ஆம் ஆண்டு முதல் ஆலய வருடாந்த உற்சவங்களில் தவறாது கலந்து கொண்டு பண்பொருந்தும் இசையில் பஞ்சபுராணம், மற்றும் ஊஞ்சற்பாக்களை அம்பாள் மனம் மகிழவும் அடியார்கள் உள்ளம் நெகிழவும் பாடிவந்தார். 2007ஆம் ஆண்டு நடைபெற்ற ஆடிப்பூர விழாவிலே தமது இரு பிள்ளைச் செல்வங்களும் அம்பாளுக்க வெண்சாமரை வீச, ஊஞ்சற் பாடல்கள் பத்தினையும் அவர் இராமாலிகையாகப் பாடி எங்கள் செவிகளுக்கு விருந்தளித்தார். அந்தக்காட்சி இன்றும் எஙகள் கண்களில நிழலாடுகின்றது. இவரைப்போன்ற இனிய குரல் கொண்ட இசையரசியை இனி எப்போது காண்போம் என ஊர் மக்களும் பரிபாலன சபையினராகிய நாமும் ஏங்கிகக் கலங்கி நிற்கின்றோம். அவருடைய பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்கிறோம். அவர் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஜெகஜோதி அம்பாளை மனதார வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மன்னதோட்டம்,<br>தொல்புரம்,<br>சுழிபுரம்.

பரிபாலன சபை<br>அருள்மிகு ஜெகஜோதி அம்பாள்<br>திருக்கோயில்

ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்<br>பேரறிவாளன் திரு

- குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபூமி முதியோர் இல்லம்
## செஞ்சொற்செல்வரின் பிரார்த்தனையுரை

இனிய குரலால் இறைவனுக்கு இசை அர்ச்சனை செய்த புனிதப்பிறவி சாரதா பரஞ்சோதி அவர்களின் பிரிவு குறித்த மிகுந்த வேதனையடைகிறேன். யாரும் எதிர்பாராத செய்தியாக இவரது வாழ்வு நிறைவுபெற்று விட்டது. எத்தனை அரங்குகளில் சாரதா அவர்களின் கணீர் என்ற குரல் ஒலித்தது. எல்லாமே நிதர்சனமாக அகத்தை வருத்துகிறது. சிரித்த முகமும், பணிவான பேச்சும் எல்லோரையும் மதிக்கும் பண்பும் இவரோடு கூடப்பிறந்தவை. இவரது இசைஞானத்தை பல மேடைகளில் வாழ்த்திய யான் அஞ்சலி வார்த்தை எழுதும் நிலையாகி விட்டது. இறைவன் தன்னடியில் தமிழ்பாட இத்தங்கையை அழைத்தான் போலும். எவ்வார்த்தையாலும் சாரதாவின் பிள்ளைகளுக்கு கணவனுக்கோ ஆறுதல் சொல்லமுடியவில்லை. அன்னாரின் சகோதரர்களுக்கும் வார்த்தையில்லை. இறைவன் வகுத்த நியதிகளை யாரால் வெல்லமுடியும். எவர்க்கும் தீமை எண்ணாத இப்புண்ணிய பிறவி இறையடியில் ஆறுதல்பெற இறைஞ்சுவதோடு அன்னாரது குடும்பத்துக்கும் இறைவன் மனத்திடத்தைக் கொடுக்க வேண்டும் என்றும் மன்றாடுகிறேன். கலை உலகுக்கு ஈடுசெய்ய முடியாத இவ்விழப்பை கடவுள் தான் ஈடுசெய்ய வேண்டும்.

**ஆறு. திருமுருகன்**

**அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்**
**பெற்றான் பொருள் வைப்புழி**

- குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுள்ளவரை நிழலாய் தொடரும்...

பாசத்தை பொழிந்து
நற்பண்புடன் எம்மை
சீராக்கிய மாமியே! உம்
திடீர் மறைவை எம்
மனம் ஏற்க மறுக்கின்றது.

தொலைவில் நீ இருந்தாலும்
என் அன்பு என்றும் உன்னோடு
இருக்கும் என்பதை
அவ்வப்போது புத்தகங்கள் வடிவில்
எமக்கு அனுப்பி வைத்தீர்கள்.

கோயில் திருவிழாக்களில் - நாம்
பண்ணோடு இசையமைத்துப்
பாட உதவி புரிந்ததில்
உங்கள் அன்பை பாதி
உணர்ந்து கொண்டோம்.

அருகருகே நாம் இருக்காவிடினும்
விடுமுறை நாட்களில்
சந்தித்து அளவளாவிய போது
உம் அன்பை வழமையாய்
உணர்ந்தோம்.

இது போன்ற சம்பவங்கள்
பலதையும் எழுத்தில்
வடிக்க முடியாவிடினும்
எம் உள்ளத்தில் வைத்து
என்றும் பாதுகாப்போம்.

எம் நினைவுள்ளவரை
உம் அன்பை நிழலாய் தொடரும்........

அன்பு மருமகள்
**பிரணவி + அருஷன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

அமரர் திருமதி சாரதா பரஞ்சோதி அன்பின் திருவுருவாய் கடமையே கண்ணும் கருத்துமாய் யாவரையும் ஒரு புன்சிரிப்போடும் எல்லோரையும் கவரக்கூடியதான இனிய குரலோடும் கதைத்து வாழ்ந்தவர் என்பதை அறிவோம். அவருடைய அகால மரணத்தை அறிந்து திகைத்துள்ளோம் அவருடைய கணவன் திரு. பரஞ்சோதி எனது மிகவும் நெருங்கியவர். கொழும்பில் இருந்த காலத்தில் தனது குடும்ப விஷயங்கள் பற்றி எல்லாம் மிகவும் புகழ்ந்து பேசுவார். முதலாவது குழந்தை மகன் பிறக்கும் போது தனது குடும்பத்தைப் பற்றிப் புகழ்ந்தார். அமரர் சாரதாவை அவருக்கு கிடைத்த பெரும் பாக்கியம் என்றும் கூறுவதுண்டு. கலைவாணி சாரதாவின் பிரிவு எம்மாற் தாங்க முடியாததுமல்லாமல் எங்கள் சமூகத்திற்கும் இசை உலகத்திற்குமே பெரும் இழப்பாகி விட்டது. அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக அவருடைய குடும்பத்தினருக்கும் எமது அனுதாபம் உண்டாகட்டும்.

ஓம்

அப்பனும் அம்மையும் சிவமே
அரிய சகோதாருஞ் சிவமே
ஒப்பி மனைவியுஞ் சிவமே
ஓதரும் மைந்தருஞ் சிவமே
செப்பில் அரசருஞ் சிவமே
தேவாதி தேவருஞ் சிவமே
இப்புவி யெல்லாம் சிவமே
எமையாண்டதும் சிவமே.

யோகாசுவாமிகள்

**பொ. செல்லப்பா**
(ஓய்வுபெற்ற சுகாதாரப் பரிசோதகா)
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள அம்மா...

நான் எனது பாடசாலையில் பாடம் நாலில் இருக்கும் போது என்னை ஓர் ஆசிரியர் வந்து அழைத்தார். நான் வரமாட்டேன் என்று சொன்னேன். பின்பு வகுப்பாசிரியர் போகும்படி கூறியமையால் நான் போனேன். எம்மை முச்சக்கர வண்டியில் கொண்டு வந்து இறக்கினர். வீடுமுழுவதும் சனம் கூடி இருந்தனர். நான் உட் சென்று உடுப்பு மாற்றினேன். எனக்கு முதல் சொன்னார்கள் அம்மாவிற்கு துவிச்சக்கர வண்டி இடித்ததெனக் கூறினர். Unicef நிறுவனம் வந்து படங்களை எடுத்தனர். அதன் பின்னர் மாலையானது சனத்தொகை குறைந்ததும் அனைவரும் தூங்கினர். விடிந்ததும் ஆறு மணிக்கு நான் முகம் கழுவியதும் சித்தன்கேணி சிறுவர் பாடசாலையில் கிளைமோர் குண்டு வெடித்தது எனக் கூறியதும் எனக்கு கைகால் எதுவும் ஓடவில்லை. நான் அழுதபடி கூறுகின்றேன் அப்பா டுபாயில் இருந்து வந்து அழுதார். ஒருநாள் வைத்திருந்தனர் அம்மாவின் பாடசாலை மாணவர்கள் Band வாத்தியத்தை அழுதபடி வாசித்தனர். அம்மாவை பெட்டியில் வைத்து கொண்டு சென்றனர். நான் அவர்களின் பின் சென்றேன். அவர்கள் என்னைத் தடுத்தனர். இராணுவம் வந்து பேசியது. என்னை தட்டி விட்டுச் சென்றார்கள். நான் வீடு திரும்பினேன். எங்கட அம்மாவிற்கு ஏன் இப்படி நடந்தது...

இப்படிக்கு
அன்பு மகன்
**சாரங்கன்**

**ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்**
**சான்றோன் எனக் கேட்ட தாய்**

**- குறள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவனுக்கும் இணைந்திருந்த யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் பெரும் புகழ் சேர்த்த இசையரசி சாரதா

என்றும் இன்முகம், பழக இனிய சுபாவமுமாய் சொற்ப நாட்களில் இசைநுணுக்கங்களை முற்றும் கற்றுத் தேர்ந்து தன் இனிய குரலால் துதி பாடி இறைவனுடன் ஒன்றித்து இசை இன்பம் துய்த்தவள் இந்த இசைமேதை சாரதா.

நவரஸங்களையும் தன் இசையில் வடித்து கேட்போரையும் இறைவனையும் தன்பால் ஈர்த்து மகிழ்வித்தவள் இந்த முத்தமிழ் வித்தகி சாரதா. இத்தரணியில் இசைப்பேரரசியாக வந்து தன் சிஸ்யைகளையும் இசைக்க வைத்தவள் இந்த ஜீவ வீணைசாரதா.

அகிலத்தின் எண்திசைகளிலும் நிறைந்துள்ள ஓங்கார நாதத்துடன் தானும் ரீங்கார மிட்டுக் கொண்டிருந்த இசைவண்டு சாரதா அந்நாதத்துடனேயே இணைந்து விட்டதே. இவர்கள் நாத உபாசகர்கள். இறைவனும் ஸ்வரதேவதைகளும் இவர்வசப் படுவர். ஈஸ்வரரூபமாகிய இறைவன் சன்னிதியில் இறைபுகழ் பாட சாரதா என்னும் நாதஸ்வரரூபியை தன்னிடம் அழைத்துக் கொள்ள அவாவி விட்டது போலும்.

இந்த இசைக்குயில் சாரதா என்றும் அணையாத ஜோதியாய் இறைவன் சன்னிதியில் ஒளிர்வாள் என்பதே என் அசையா நம்பிக்கை அந்த இன்பச் சமூகத்தை நாமும் ஓர்நாள் அடைவோம் என்ற நம்பிக்கையில் ஆறுதல் அடைவோம்.

ஈற்றில் என் இசைப்பணியில் இறைவன் எனக்களித்த பெரும்பேறு இப் பண்பு நிறைந்த இசைமாணவி சாரதா.

உம் இசைச் சேவையை சமூகம் வாழ்த்திக் கொண்டேயிருக்கும்

**திருமதி ஜீவா இரத்தினசபாபதி**
ஓய்வுபெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைத்தாய்க்கு அஞ்சலிகள்

தாங்க முடியவில்லையே தாயே உம் பிரிவை
ஏங்கித் தவிக்கின்றேன் உம் குரலிசை கேட்டிட
நீங்காதா நினைவுக்குள் நானிங்கே
தேங்கி வழியுதம்மா கண்களில் நீர்த்துளிகள் - உம்
இசைமழை கேட்கவென ஓடி வரும் ரசிகர்களும் இன்று
அசையாமல் உறங்கிடும் உம் உடலைப் பார்ப்பரோ – அந்த
உடலைக் கூடப் பார்க்க என்னால் முடியவில்லை
சங்கதி பேசிடும் உம் சாரீரம் - இன்று
சாய்ந்து கிடக்கிறதே தாயே உம் சரீரம்
இசைக்குலம் வேகுதே உமை இழந்து
திசையெல்லாம் பனிக்குதே உம் இசை இழந்து உறவுகளே!

ஐந்தாம் தரத்தில் நான் அச்சத்துடன் தோற்றினேன்
வந்தமர்ந்த எனக்கு வந்தது சந்தோஷம்
பூரண சந்திரன் போன்ற சிரித்த முகம்
புன்னகையோடு தேர்விற்கு அழைத்த விதம்
தம்புராவை மீட்டிட எவருமில்லையே என்றுரைக்க
என்னருகில் அமைதியாய் கிடந்த தம்புராவை
எழுந்து வந்து அருகிருந்து அதனை மீட்டி காம்
எடுப்பாய் பாடு தம்பி பயமொன்றும் வேண்டாம்
கொடுப்பேன் நல்ல புள்ளி நல்லாசி உனக்கென்று
என்னுள்ளம் குளிரச் சொன்ன அந்தத் தாய்
மண்ணுலகம் விட்டு விண்ணுலகம் சென்றாரே
வானொலியில் கேட்டதும் வதங்கிப் போனேன் - இவர்
கான ஒலி தந்த வானொலியில் வந்த சேதி
நீண்டு கொண்டே போனது
நினைக்க கண் பனிக்குது
கனக்கும் நெஞ்சுடன் கதறினாலும் கேட்குமோ
எனக்கு முடியவில்லை என் செய்வேன் நான்
சுந்தர முகத்தாயே சோதனை நீழுதம்மா!
வேதனை பெருகுதம்மா.

**சி. இசை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பின் சிகரம்

காலஞ் சென்ற இசைக்கலாமாணி திருமதி சாரதா பரஞ்சோதி அவர்கள் 1989ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகம் இரமநாதன நுண்கலைக் கழகத்தில் இசைக்கலைமாணிப்பட்டபடிப்பின் இறுதி ஆண்டில் என்னிடத்திலம் இசைப்பயிற்சி பெற்றவர். நற் பண்புகள் நிறைந்த உத்தம மாணவியாக இருந்து இசைப் பயிற்சி பெற்றவர். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்ற முதுமொழிக்கிணங்க அவரது குணாம்சங்கள் இருந்தன. நற்பண்புகள் நிறைந்தவர். பெரியவர்களுக்கும் மிக்க மரியாதை கொடுத்து வாழ்ந்தவர். நல்ல சாரீர வளங் கொண்ட சிறந்த இளம் பாடகியாகத் திகழ்ந்தவர். அவரது அண்ணாவின் பிள்ளைகள் இசைக்கல்லூரியில் என்னிடத்தில் இசை பயின்று கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது அடிக்கடி நான் செல்வேன். உங்கள் மாமி சாரதாவைப் போன்று நீங்களும் பாடவேண்டுமென்று உற்சாகப்படுத்திய காலத்தில் சாரதா அவர்களின் மரணச் செய்தி வானொலி மூலங்கேட்டு அதிர்ச்சியடைந்தேன். நெஞ்சங் கல்லாகியது மிகுந்த பண்புகள் நிறைந்த இளம் பாடகியின் இசைக் கச்சேரிகள் மறக்க முடியாதவை. எதிர் காலத்தில் இவரது இசைக்கச்சேரிகள் மிகச் சிறப்பாக இருக்கும் என்று எதிர்பார்த்த இரசிகர்களுக்கு இறைவன் சாரதா அவர்களைத் தனது பாதாரவிந்தத்தில் இணைத்துக் கொண்டார்.

"ஓசை ஒலியெலாம் ஆனார் நீயர்"

இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

சங்கீதபூஷணம்
**ச. பாலசிங்கம்**
"ஏழிசை"
அரியாலை,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை உரை

**அமரர் திருமதி சாரதா பரஞ்சோதி அவர்களுக்கு**

மூளாய் என்று சொன்னால் அருட்சிறப்பும், பொருட் சிறப்பும், கலைச்சிறப்பும் கொண்ட இடம் இதுவாகும். இங்கு எழுந்தருளி அருள் பாலிக்கும் வதிரன் புலோ சித்திவிநாயகர், முருகன் ஆலயங்களின் வரலாற்றுச் சிறப்பினை தனது ரம்மியமான இசை மூலம் அருள் மணத்தையும் கலைமணத்தையும் சேர்த்து ஒலிப்பேழையினூடாக உலகிற்கு வெளிப்படுத்தியவர் அமரர் திருமதி சாரதா பரஞ்சோதி அவர்கள். இவர் கலை உலகிற்கு ஆற்றிய பங்கு இவரது வயதுடன் ஒப்பிடும் போது மிக அளப் பெரியது. இவர் மூளாய் கிராமம் பெற்றெடுத்த இசைக்குயில்.

அமரர் திருமதி சாரதா பரஞ்சோதி அவர்கள் பாடசாலையில் சங்கீத ஆசிரியர் என்ற குறுகிய வட்டத்திற்குள் நின்று விடாது பல மேடைகளில் இசைக்கச்சேரிகளை நடாத்தி தனக்கென ஒரு தனியிடத்தையும் ரசிகர் கூட்டத்தையும் பெற்றிருந்தார். எமது வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையின் தற்போதைய நிர்வாக சபை உறுப்பினர்களில் ஒருவராகத் திகழ்ந்து பேரவையின் செயற்பாடுகளில் பெரும் பங்கு வகித்தவர். மேலும் பிரதேச செயலகத்தினால் கடந்த காலங்களில் நடாத்தப்பட்ட கலாசார நிகழ்வுகளில் இவரது பங்களிப்புக்கள் நிச்சயமாக அமைந்திருந்ததைக் காண முடிந்தது.

01. 07. 2007 அன்று தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் நடைபெற்ற பிரதேச செயலக கலாசார நிகழ்வில் மூளாய்சகோதரிகள் என்ற பெயரில் அமைந்த இவரது தனியான இசைக்கச்சேரி அச்சபையில் பலரது பாராட்டினையும் பெற்றிருந்தது. ஆனால் அந்நிகழ்வு ரசிகர்களிடமிருந்து இறுதியாக விடைபெறும் நிகழ்வாக மாறுமென ஒருவரும் நினைக்கவில்லை. இன்று அவரது இழப்பு வலிகாமம் மேற்கிற்கு மட்டுமல்லாது இசை உலகிற்கே ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. அமரர் திருமதி சாரதா பரஞ்சோதி அவர்களின் மறைவு அன்னாரின் குடும்பத்திற்கு ஒரு பேரிழப்பாகும். ஆகவே அன்னாரின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

**செல்வி ரஜனி கந்தசாமி**
கலாசார உத்தியோகத்தர்
செயலாளர் - வலி மேற்கு கலாச்சாரப் பேரவை
பிரதேச செயலகம்
சங்கானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான சகோதரி சாரதாவே

அன்பான சகோதரியே ஆசைக்குறைவிடமே
இனிமையாய் சுகித்திருந்தோம் இம்மையினில்
இந்நிலத்தே
செப்பு மொழியாது மின்றிச் சேர்ந்தீர் சிவனடியை
எப்பொழுது வந்துறுவீரிங்கு

நந்தா விளக்கு என நாளும் திகழ்ந்த
செந்தாமரை முகமும் தேன் மொழியும் அந்தோவுன்
உள்ளத்தயையு முதவியும் வேறுண்டோ
வெள்ளக் கடற் புவியின் மேல்
சாரதா என்றோர் கண்ணியத்தை நாம் கண்டோம்
பாடித்திரிந்த அந்தப் பாலகத்தை எண்ணுகின்றோம்
ஓடி வந்து எமக்கு உற்ற துணை நீயாகி
ஆடிக் காற்றதனில் அடிபட்டு வீழ்ந்ததென்ன
சூடிக்கொடுத்தனையே உன்னுடலை இறையடிக்கே
நாடிச் சாராதா கேட்கின்றோம் சொல்வாயோ.

**சந்திரா அக்கா**
மூளாய்

ஆவாரை யாரே அழிப்பார்? அதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பார்? ஓவாமல்
ஐயம்புகுவாரை யாரே விலக்குவார்
மெய் அம்புவி அதன்மேல்.

**(நல்வழி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதிர கானம் பாடிய இளம் இசைக்குயில் அம்மா சாரதாவே எங்கு சென்றீர்

மானிடப் பிறவி எடுத்தவர்கள் இறப்பது இயல்பு ஆகும் ஆனால் இவரின் இழப்பு எல்லோரையும் சொல்லொணாத் துயரில் ஆழ்த்தியுள்ளது. "காலன் எனை அணுகாமல் உனதிரு காலில் வழிபட அருள்வாயே" என்று பாடினீர். ஆனால் அக்கொடியவன் இரக்கமின்றி ஒருநொடிப் பொழுதில் கவர்ந்துள்ளான். தனது தந்தையாரின் வழியில் தலை சிறந்த ஆசானாய் இளம் வயதினில் பல பட்டங்களைப் பெற்றுத் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துத் தனது பாடசாலைக்கும் தான் பிறந்துவளர்ந்த கிராமத்திற்கும், அயற் கிராமத்திற்கும் ஓர் எடுத்துக் காட்டாகிச் சென்றுள்ளார்.

"இசையால் வசமாக இதயம் எது என்ற பாடலுக்கு ஏற்பவும்" ஊனினை உருக்கி ஒளி பெருக்கி" என்ற மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகப் பாடலுக்கு ஏற்ப இவ்வம்மையார் தனது கற்பித்தல் திறமையினால் தான் கற்பித்த பாடசாலை மாணவர்களைப் பல போட்டிகளில் பங்கு பெறச் செய்து மாவட்டமட்டம், தேசிய மட்டத்திலும் பரிசில்களைப் பெற்றுக் கொடுத்து பலரின் பாராட்டுக்களையும் பெற்றார்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாமென்றும் திருவள்ளுவர் திருக்குறளில் கூறிய படி " பிறவியாகிய பெருங்கடலை நீந்தி இறைவனுடன் சேராமல் எங்கு சென்றீர் அம்மா சாரதாவே?

"என்ன கவி பாடினாலும் உன்தன் மனமிரங்கவில்லையா இன்னம் என்ன சோதனை என்று முருகப்பெருமான் மீதும் உமது இசைவண்மையினால் பஞ்ச புராணங்களைப் பல்வேறு பண்களில் பாடி எல்லோரையும் மனமுருக வைத்த அம்மா சாரதாவே எங்கு சென்றீர்.

பச்சை நிற மேனியாகிய நீர் உனது காலடியில் நான் அமைதி காண வந்தேன். என்ற நீர் இறைவனிடம் சென்று விட்டீர். உமது கணவரையும் மழலைச் செல்வங்களையும் ஒருகணம் நினைக்க வில்லையோ.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக!

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்"

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்புள்ள அத்தான்

**ஏகாம்பரநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்நாடக இசையரங்கு

இசையரங்குகள் பலவற்றை இக்கால சூழ்நிலையில் நாம் காண்கின்றோம். கவர்ச்சிகரமான ஒலி அமைப்பால், இசையமைப்பின் நவீன வசதிகளுடன் செய்யப்பட்ட ஒலிநாடாக்கள், இறுவட்டுக்கள் எனப் பல வெளியிடப் படுகின்றன. இவை ஒரு குறிப்பிட்ட அளவில் அவற்றைச் செய்யும் பொழுது உள்ள மனோதர்ம கற்பனை வெளிப்பாட்டைக் காட்டுகின்றன. முற்காலங்களில் இவ்வாறான வசதிகள் அற்ற காலங்களில் இசையரங்குகள் மணித்தியாலக் கணக்காக நடைபெற்றதை நாம் கண்டும் கேட்டும் அறிந்துள்ளோம்.

சங்கராபரணம், நரசையர், தோடி சீதராமையர், மேகடசுப்பிரமணியையர், சகனம் கிருஸ்ணய்யர், பல்லவி கோபாலையர், எனப் பல்வேறுபட்ட துறையில் துறை போனவர்களைப் பற்றி இடைக்கால வரலாற்றைக் கற்ற யாவருமே அறிந்துள்ளோம். காலப்போக்கில் இசையரங்கு ஆகக் கூடியது மூன்று மணத்தியாலங்களாக மாறி விட்டது. இக்காலப்பகுதியல் ஒரு இசைக்கலைஞர் தனது முழுத்திறமையையும் வெளிப்படுத்துவார். இசை உருப்படி களைக் கையாள்வதிலும். மனோதர்மப்பாவான இராகம், தாளம், பல்லவி, நிரவல், தரிகாலம், கற்பனாஸ்வரம், ஸ்வரக்குறைப்பு, தீர்மானம், பக்க அவாத்தியங்களுக்கான வாய்ப்புக்கள் இத்தனையும் இக்காலப்பகுதியில் நிகழும்.

இங்கு குறிப்பிட்ட மனோதர்ம விடயங்களுக்கான நேரப்பங்கீட்டை பிரதான இசைக்கலைஞர் வகுத்துக் கொள்வார். அநேகமாக இரண்டு அல்லது ஒன்றரை மணிநேரம் இசையுருப்படிகளை வெளிப்படுத்த இராகம், உருப்படி, நிரபல் கற்பனாஸ்வரம் ஆகியவற்றைக் கையாள்வர். இதை விட இராகம் கிருதி மட்டும் அல்லது கிருதி அல்லது கீர்த்தனை கற்பனாஸ்வரம் மட்டும் எனவும் மிகுதி நேரத்தில் இராகம், தாளம், பல்லவி எனவும் வெளிப்படுத்துவர். வெளிப்படுத்துதல் என்று சொல்லும்போது பாடகர், பாட்டுவாத்தியக்கலைஞர் ஆகியோர் குறிப்பிடப்பட்டவராவர். இசை உருப்படிகள் என்னும் போது கர்நாடக இசையைப் பொறுத்த வரையில் எந்த உருப்படிக்கும் சாகித்தியம் இருக்க வேண்டும். வாத்தியக் கலைஞர் சாகித்தியத்திற்குப் பதிலாக அதன் இசையையே வெளிப்படுத்துகிறார் என அறிந்து கொள்வது அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உருப்படிகளை வெளிப்படுத்தும் போது முக்கியமாக கவனிக்க வேண்டியவை**

ஒரு இராகத்தில் வெளிப்படுத்திய முதல் உருப்படிக்கும் மற்ற உருப்படிக்கும் இடையே ஸ்வரதான வேறுபாடு, காலப்பிரமாணம், தாளவேறுபாடு என்பன முக்கியமாக கவனிக்கப் படவேண்டும். ஆரம்பத்தில் வெண்பா, விருத்தம், ஸ்லோகம் என ஆரம்பிப்போரும் உளர். வேறுபலர் வர்ணம் இரண்டு காலமாகப் பூர்வாங்கப் பகுதியை வெளிப்படுத்தி எடுத்த காலங்களுக்கு இடைக்காலமாக உத்தராங்கப் பகுதியை வெளிப்படுத்துவர். தாளங்கள் வெவ்வேறாகவும் தாள எடுப்புக்கள் சம, அதீத, அநாகத எடுப்புக்களாகவும் இருக்கவேண்டும். பாடகர் இராகம் பாடும்போது பாட்டு வாத்தியக் கலைஞர் பெரும்பாலும் வயலின் வாசிப்பவர் அவர் வெளிப்படுத்தியவற்றைப் பின் தொடர்வதே முறையும் வழக்கமுமாகும். இராகம் படிய பின் வயலின் வாசிப்பவருக்கும் தொடர்ந்து அதே இராகத்தைப் பாட வாய்ப்புக் கொடுப்பார். இவ்வாறே கற்பனாஸ்வரம் பாடும் போது நிகழும் பாடகரோ, பிரதான வாத்தியக்காரரோ கற்பனாஸ்வரம் பாட விளம்ப மத்திம காலங்களில் ஒரு அமைப்பு முறையில் அரை ஆவர்த்தம், முழு ஆவர்த்தம், பலஆவர்த்தங்கள் பின்னர் ஸ்வரங்களைக் குறைப்பு, என்ற முறையில் வெளிப்படுத்துவர். இதன் பின் பாடப்பட்ட உருப்படியின் பிரகாரம் அதே காலத்தில் காலப் பிரமாணம் வழுவாது தனி ஆவர்த்தனம் என தாள வாத்தியக்காரர் வாசிப்பார். தொடர்ந்து பிரதான கலைஞர் சில துக்கடாப்பாடல்கள் தேசிய இராகங்களில் அமைந்தவற்றை அளிப்பர்.

தொடர்ந்து இராகம், தாளம், பல்லவி, நிரவல், தரிகாலம், கற்பனாஸ்வரம், தனி இராகமாலிகை ஸ்வரங்கள், ஆவர்த்தனம் என்பன வெளிப்படுத்தப்படும். இந்த நிகழ்ச்சியே ஒரு இசைக்கலைஞரின் முழுத்திறனையும் வெளிப்படுத்தும் சந்தர்ப்பமாக அமையும். இதனை அடிப்படையாகக் கொண்டே இரசிகர்கள் கலைஞரை மதிப்பிடுவதோடு இவரது நிகழ்ச்சிகளை தொடர்ந்தும் கேட்க விரும்புவர். இவ்வாறான புகழ் பெற்ற கலைஞர் பலர் இந்தியாவில் வாழ்ந்து மறைந்துள்ளார்கள். எமது ஈழநாட்டிலும் பல சிறந்து குறிப்பிடத்தக்க கலைஞர் வாழ்ந்து போயுள்ளனர். இன்றும் பல பிரபல்யமான கலைஞர்கள் வாயப்பாட்டிலும், வாத்தியத்திலும் நமது நாட்டிலும் தாயி நாட்டிலும் வாழ்ந்து சுத்தமான இசையை இசை விழாக்கள் தியகராஜ உற்சவங்கள் போன்றவற்றில் செயற்படுத்தி வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதருள் மாணிக்கமான மாமேதை இசையருவி

திருமதி சாரதா பரஞ்சோதி அவர்களின் பிரிவுக்காய் நாம் சிந்தும்

# கண்ணீர்அஞ்சலிகள்

மண் மகிழ
03.11.1965

கண் நெகிழ
25.09.2007



# அமரர் திருமதி சாரதா பரஞ்சோதி

மூளாயூர் தந்த மணிக்குரலே
மூத்த விநாயகனைப் பாடும் குயிலே
மாண்பினை அறியா மக்கள்
மறைந்திட்ட வேளையதனில்
வெண்கலக் குரலால் வெள்ளிப் பசனையை
வெற்றி கொண்ட வெள்ளை உள்ளமே
தன் நிகரால் பெற்ற தங்கங்கள்
தவிக்கின்றதம்மா தன் கைபட
எம்மூர் வழிவந்து மாணவ மணிகளே....!
எம் வீடு வாரீர்! இலவச இசை பயில...!
என்றெம்மை அழைத்து பயிலும் வேளை
ஏன்தான் இந்நிலை ஏங்குது எம் நெஞ்சங்கள்

அமரரது குடும்பத்தினரின் துன்பத்தில் நாமும் பங்கேற்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மூளாய்
27.09.2007

பிரிவால் துயருறும்

மனிதவள அ.ச.ச. நிலைய நிர்வாகமும் மக்களும்
குமரம்புலம், மூளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூளாயின் முத்து எனப் போற்றிப் புகழப்பட்ட "இசை அருவி"**

# திருமதி சாரதா பரஞ்சோதி

**அவர்களின் அகால மறைவையொட்டி நாம் சிந்தும்**

# கண்ணீர்ப்பூக்கள்

தோற்றம்
03.11.1965

மறைவு
25.09.2007



பாடித் திரிந்த குயில் பாட இன்று மறுத்ததுவோ!
ஆடித் திரிந்த மயில் அழகிறகும் உதிர்த்ததுவோ
ஓடித்திரிந்ததொரு இசையருவி வறண்டதுவோ
கூடித் தரிந்த குழாம் குற்றுயிராய் துடித்ததுவோ!

நாடிப் படித்த சிறார் நடுத் தெருவில் நின்றனரோ!
ஆடி அசைந்த கொடி வாடிக் கிடந்ததுவோ!
மாடி மனையொன்று மணல் வீடாய் மறைந்ததுவோ!
ஈடிணையே இல்லாத இசை மேகம் கலைந்ததுவோ!

நீடித் திருந்ததொரு நின்மதியும் குலைந்ததுவோ
சூடிக் கொடுத்ததோரு சுடர் கொடியும் உதிர்ந்ததுவோ!
மூடி வைத்த முத்தொன்று மாயமாய் மறைந்ததுவோ!
தேடிக் கிடைக்காத தென்றல் புயல் ஆனதுவோ!

கோடி மக்கள் கேட்டதொரு குரலின்று அடங்கியதோ
சோடி தனில் ஒன்றின்று சோபை இழந்ததுவோ
சாடித்தேன் சரிந்தின்று சாலையிலே சிந்தியதோ!
ஏடிசைத்த பேடு இனி எம் கண்ணில் பட்டிடாதோ!

சோடிப் புறாவிரண்டு சோகத்தால் மீண்டிடுமோ!
ஆடிப் பாடியவை அம்மாவை மறந்திடுமோ!
நாடி வந்து சோதி மகன் சாராவென் றழைப்பானோ!
மூடிக்கிடக்கின்ற முத்தாரம் எழுந்திடுமோ!

கோடிட்டுக் காட்டி நின்ற கோவிலிசை மறப்போமோ!
பாடிப் பதித்தளித்த பண்ணிசையில் நினைப்போமோ!
தேடியுன் திருவடிக்கு கோடி மலர் நாம் சொரிந்தே
கூடிக் கும்பிடுவோம் சாரதாவே சாகாய்நீ!!!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மூளாய்,
25.09.2007

அகாலத்தால் மறைந்திட்ட அமரர் அவர்களின் பிரிவால் துயருறும்
சித்தி விநாயகர் வர்த்தகநிலையம்
பிள்ளையார் கோயிலடி, மூளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டிசைத்து பார்விட்டு பரமனடி சேர்ந்திட்ட
நாட்டிலுயர் வித்தகியாம்

# அமரர் திருமதி சாரதா பரஞ்சோதி

அவர்களின் அகால மறைவுக்காய் நாம் உதிர்க்கும்

# கண்ணீர்ப்பூக்கள்

காற்றிலே கலந்திட்ட கானவாரிதியும் நீ
சேற்றிலே புதைந்திட்ட செந்தாமரையும் நீ
ஆற்று வெள்ளமெனப் பாடும் ஆற்றலும் பெற்றவள் நீ
நேற்றுவரை இருந்தாய் நீ இன்று எங்கு சென்றிட்டாய்

சங்கீதத்தோடு என்றும் சங்கமித்து நின்றவள் நீ
எங்கெங்கும் இசை முழங்கி ஏற்றங்கள் தந்தவள்நீ
மங்காத நிலவினைப்போல் மதி முகமும் கொண்டவள் நீ
பொங்குமிசைப் பூங்குயிலே போன இடம் சொல்வாயோ!



ஆசிரியத் தொழிலினிலே அடிபதித்து நின்றவள் நீ
நேசித்த மாணவர்தம் நெஞ்சத்தில் நிறைந்தவள் நீ
பூசித்த தெய்வத்தின் பூவாக வீழ்ந்தவள் நீ
பேசித்தான் நேற்றிருந்தாய் இன்று எங்கு சென்றாயோ!

பரஞ்சோதி மைந்தன்தன் பாசத்து பத்தினி நீ
வரமாக மூளாய்க்கு கிடைத்ததொரு புத்திரிநீ
சரமாக ராகங்கள் மீட்கின்ற கருவியும் நீ
கரமாக நேற்றிருந்தாய் இன்று எங்க சென்றாயோ!

பெற்றபிள்ளை இருவரையும் பெரிதுவத்து நின்றாய் நீ
கற்றவர் ஆக்கிடவே காலங்கள் களித்தாய் நீ
உற்றாரை சோதரரை உபசரித்து நின்றாய் நீ
பற்றுள்ளோர் வந்திருந்தார் பாசமகள் எங்க சென்றாய்!

தோற்றம்
03.11.1965

வதிரன்புலோவானை வாழ்த்தியே வாழ்ந்தவள்நீ
கதிர்வேலன் தன்னையுமே இசை மழையால் நனைத்தவள்நீ
உதிர்க்கின்ற வார்த்தைகளால் உலகத்தை ஆண்டவள்நீ
புதிர்போட்டுப் போனாயோ பாமகளே எங்கு சென்றாய்!

மறைவு
25.09.2007

ஆறாத துயருக்கு மருந்தாயும் நின்றாய் நீ
மாறாத வேதனைக்கும் மாற்றீடு சொல்வாய் நீ
வேறாக நாமின்றி சாரதா நாம் ஒன்றாகிநீ
கூறாமல் சென்ற துயர் பகிர்கின்றோம் அறிவாயோ!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

மூளாய்
25.09.2007

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தோடு
ஆறாத்துயர் பகிரும்
பழைய மாணவர் சங்கம்
சைவப்பிரகாச வித்தியாலயம் - மூளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I. **கீர்த்தனை**

இராகம்: சகானா                                        தாளம்:- ஆதி

**பல்லவி**

ஸ்ரீ வாதபி கணபதியே – நின்
திருவடியே சரணம்

**அனுபல்லவி**

தேவாதி தேவன் தியாகேசன்
திருவிளையாடல் செய் திருவாரூர்வளர்

**சரணம்**

நம்பினபேர் இகபரம் இரண்டிலும்
நல் வாழ்வும் சேர் இன்பமும் நல்கும்
தும்பி முகப் பெருமானே அடிதொழும்
தொண்டர்கள் வேண்டும் வரம் தருவோனே
சம்புவுடன் கமலாம்பிகை மகிழும்
தனையனே தயாபரனே ஜெகம் புகழும்
உம்பர் முனி அருள் குமாரர் முன்
கோமானே இராமுதாசன் உள்ளம்வளர்.

II. **கீர்த்தனை**

இராகம்:- ஹிந்தோளம்                                        தாளம்:- ஆதி

**பல்லவி**

சாமகான லோலனே சதா சிவ சங்கரனே
தயாபரனே – ஜெய

**அனுபல்லவி**

சோம சுந்தர சந்திர சேகர
சோமாஸ் ஸ்கந்தா ஸ்ருத ஜன சுபகர

**சரணம்**

காமாரே முராரே கல்பக நாயிகே – நாதே
கருணை செய்வாய் ஸ்ரீ மகா தேவ
தேவக்ர சாலிம் தீன ராம
தாசனுத ஜடாத்தர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III. **கீர்த்தனை**

**இராகம்: அமிர்தவர்ஷனி** **தாளம்:- ஆதி**

**பல்லவி**

என்முகம் பாரையா சண்முகனே – என்றும்
உன்முகம் கண்டிட உருகித் தவித்தேன் ஐயா

**அனுபல்லவி**

நின்முகம் அன்றி இந்த நிலத்தில் துணையு முண்டோ
இன்முகம் தந்தருள்வாய் பன்னிருகையனே

**சரணம்**

அருள் அமிர்த மழையை அகப்பயிரில் பொழியும்
ஆன்மவயல் செழிக்கும் அன்பர் வினை அழியும்
திருவளர் நல்லை நகர் திகழ் முருகையனே - உன
திருவடி நம்பினேன் திக்கு வேறில்லை ஐயா.

IV. **இராகம்:- கல்யாண வசந்தம்** **தாளம்: ஆதி**

**பல்லவி**

கல்யாண வசந்த மண்டபத்தில் - எந்தன்
கால்தூக்கி கண்ணன் அம்மிக்கல்லில் வைத்தானடி

**அனுபல்லவி**

எல்லாம் மறந்தேனடி ஏகனோடினைத்தேனடி
நல்லாயன் வெங்கடேசன் நாயகன் ஆனானடி

**பல்லவி**

ஓமம்புகை நடுவே ஓரக்கண்ணால் பார்த்து
கோமளப் புன்னகையால் குழைத்தானடி நெஞ்சம்
சியாமள வண்ணன் கண்ணன் சௌந்தர்யலா வண்ணன்
பூமலர் பொனனாலை பதி புனித வரதராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V. **இராகம்:- கல்யாண வசந்தம்** **தாளம்: ஆதி**

**பல்லவி**

சினமடையாதே சீறி விழாதே
சிறந்த குணங்களைச் சிதற விடாதே
(சினமடையாதே)

**அநுபல்லவி**

மனம்போன போக்கினில் போக விடாதே
மாபெரும் புகழ்வரினும் மகிழ்ந்து துள்ளாதே
(சினமடையாதே)

**சரணம்**

அற்பரைப் போய் அடுத்துன் அறிவை விற்காதே
அறிவுடைப் பெரியோரை அவமதியாதே
கற்பனை உலகினில் கனவு காணாதே — காலம்
கடந்த பின்பும் கண் விழிக்காதே
(சினமடையாதே)

**பாரதியார் பாடல்**

சுட்டும் விழிச் சுடர் தான் - கண்ணம்மா
சூரியச் சந்திரரோ!
வட்டக் கரிய விழி - கண்ணம்மா
வானக் கருமை கொல்லோ?
பட்டுக் கரு நீலப் - புடைவை
பதித்த நல் வயிரம்
நட்ட நடுநிசியில் - தெரியும்
நட்சத்திரங்களடி!

சோலை மலரொளியோ - உனது
சுந்தரப் புன்னகை தான்?
நீலக் கடலலையே - உனது
நெஞ்சிலலைகளடி!
கோலக் குயிலோசை - உனது
குரலினிமையடி
வாலைக் குமரியடி - கண்ணம்மா!
மருவக் காதல் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்திரம் பேசுகிறாய் - கண்ணம்மா!
சாத்திர மேதுக்கடீ?
ஆத்திரம் கொண்டவர்க்கே - கண்ணம்மா
சாத்திர முண்டோடீ?
மூத்தவர் சந்நிதியில் - வதுவை
முறைகள் பின்பு செய்வோம்
காத்திருப்பேனடீ? - இது பார்
கன்னத்து முத்தமொன்று.

## இராகமாலிகை

தாளம்:- ஆதி

### பல்லவி

இராகத்தில் சிறந்த இராகமேது
கல்யாணியா காம்போதியா

### அனுபல்லவி

அகத்தைக் குளிரச் செய்யும் அழகான தோடியா
ஆக்க்த்திற்கே உகந்த நாட்டைக் குறிஞ்சியா
பாவத்தோடு பாட பைரவியா - மனம்
பாங்காய் உருக வைக்கும் ரஞ்சனியா

### சரணங்கள்

சிந்தை குளிர வைக்கும் சிம்மேந்தர மத்யமமா
சந்தோஷத்தைத் தரும் சங்கரா பரணமா
காவேரி போலோடும் காவேரியா
களப்பை நீக்க வல்ல காபியா

(இராகத்தில்)

கலகலப்பாய் பாட கரகரப்பிரியாவா
கருணையே உருவான காமவர்த்தினியா
பௌதாரியா சுத்த காவேரியா
பஞ்சம மில்லாத ஹிந்தோளமா
தேவ மனோகரியா தேவசாந்தாரியா
தேனிலும் இனிக்கும் கானாவா.

(இராகத்தில்)

பண்ணிசைத்துப்பாட சண்முகப்பிரியா
படு த்துறங்கச் செய்யும் நீலாம்பிரியா
அதிகாரமாய் பாட அடானாவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில மெல்லாம் மயக்கும் ஆனந்த பைரவியா
வசந்தாவுடன் மலைய மாருதமா
பந்த காசம் தரும் மோகனமா

(இராகத்தில்)

பாவமகல ஒரு தன்யாசியா
தரணியை காத்தநல் தர்பாரோ
சரச சர்வாபகத்திற்கு சாரங்காவா
சியாமளவை எழுப்ப பூபாளமா
பாங்காகப் பாட ஓர் பாகேஷ்வரியா
சாந்தமாய் பாட சாமாவா
சிங்காரமான சிந்துபைரவியா
மக்களம் பாட ஓர் மத்யமாவதியா

(இராகத்தில்)

ஸ்ருதி சுத்தமாகவும் ஸ்வரசுத்தமாகவும் சுக பாவத்துடன் பாடும் இராகம் சிறந்தது.

**கீர்த்தனை**

**இராகம்: திலங்** **தாளம்:- ஏகம்**

**பல்லவி**

சாந்தி நிலவ வேண்டும் - எங்கும்
உலகிலே சாந்தி நிலவ வேண்டும்
ஆத்ம சக்தி ஓங்க வேண்டும் - உலகிலே
சாந்தி நிலவ வேண்டும்.

**அனுபல்லவி**

காந்தி மகாத்மா கடடளை அதுவே
கருணை ஒற்றுமை கதிரொளிபரவி

கொடுமை செய் தீயோர் மனமகிழ்ந்திருந்த
நற்குணம் அதை புகட்டிடுவோம்
மடமை அச்சம் அறுப்போம் மக்களின்
மாசிலா நல் லொழுக்கம் வளர்ப்போம்
திடம் தரும் அகிம்சா யோகி நம் தந்தை
ஆத்மானந்தம் பெறவே
கடமை மறவோம் அவர்கடன் தீர்ப்போம்
களங்கமில் அறம் வளர்ப்போம் எங்கும்.

(சாந்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா

தளையரத்தினமுதலியார்

செங்காரப்பிள்ளை உடையார்

விஸ்வநாதர்

இராமலிங்கம்

கோவிந்தபிள்ளை

கனகசபை + சோதிமுத்து

சச்சிதானந்தன்

பரஞ்சோதியம்பாள்+ஆறுமுகம்
ஏகாம்பரநாதன் + சிவசக்தி
கனகநாயகி

ஆறுமு
ஏகாம்
இலகுபிள்ளை +

உத்தமிதேவி
+
அப்புராசா
வெற்றிவேல்நாதன்
சண்முகநாதன்
செல்வராணி

அருந்ததிதே

கோவிந்தராஜன்
+
பரிமளா
பிரணவபிரியன்
சங்கீரணி

கோமதி
(அமரர்)

யசோதா
(அமரர்)

சாரதா

கோமளா
+
தெய்வேந்திரம்

கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

ஆறுமுகம்
ஏகாம்பரம்
இலகுபிள்ளை + கதிரைமலை

அருந்ததிதேவி

நடராசா
(அமரர்)

தங்கதேவி
+
சண்முகநாதன்
மகாலட்சுமி
சிந்துஷா
ஜெயலட்சுமி

நரசிம்பமுதலி
சண்முகம்
வேலாயுதர்
நாகநாதர்
சிதம்பரப்பிள்ளை
வேலாயுதம்பிள்ளை
சதாசிவம் + மகேஸ்வரி

கோபாலகிருஷ்ணன்
+
இரத்தினேஸ்வரி
பிரணவன்
கிரிகரன்
சிவகலை

வெற்றிவேல்
+
சுசிலாதேவி
வைஷ்ணவி
தர்ஷா
நிரோஷா

பரஞ்சோதி

ரங்கநாயகி
+
பாலேந்திரா
பிரணவி
அருஷன்

சபாநாதன்
+
இந்திராணி
சர்மிலன்
(அமரர்)

பரஞ்சோதி + **சாரதா**
சாரங்கன்
ஷங்கவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

சர்வசித்து ஆண்டு 25/09/2007 அன்று
திடீர் இழப்பை எய்திய
எங்கள் குடும்பத் தலைவி
**திருமதி சாரதா பரஞ்சோதி**
அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டும்,
அனுதாபச் செய்திகள் அனுப்பியும்,
கண்ணீர் அஞ்சலிகள் செலுத்தியும்,
மலர் வளையங்கள் சாத்தியும்
எமக்குப் பல வழிகளிலும் ஆறுதலும் தேறுதலும் அளித்த
உற்றார் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும்,
பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும்,
சங்கானை சிவப்பிரகாச Band வாத்தியக் குழுவினருக்கும்,
அரசாங்க வைத்தியசாலை வைத்திய நிபுணர்களுக்கும்,
மற்றும் ஊழியர்களுக்கும், பத்திரிகை நிறுவனத்தினருக்கும்,
அன்னாரின் இறுதிக் கிரியை, இறுதியாத்திரை
முதலானவற்றை நடாத்த உதவியவர்களுக்கும்,
இன்னும் பல வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும்
நன்றியைக் கூறிக்கொள்கின்றோம்.
மேலும் இம்மலருக்கு ஆக்கங்களைத்
தந்துதவியவர்களுக்கும்,
இனிதே அச்சாக்கம் செய்த அச்சகத்தாருக்கும்
நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
நன்றி

*இப்படிக்கு*
*குடும்பத்தினர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ
அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாக நடக்கும்
உன்னுடையதை எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
நீ எதை படைத்திருந்தாய்
அது வீணாவதற்கு
எதை எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதைக் கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாக-
ிறது.
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகிறது.



"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JS Printers Pandatheruppu.